Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–28 | 12 –08–2004 | வியாழக்கிழமை | ஓசை –176



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V. பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். (சி-9956) விநாயகர் வீதி, மயிலிட்டி.

# இடைத்தரகரின்றிப் பிரபாகரனுடன் பேச்சுக்கள் நடத்த சந்திரிகா விருப்பம்!

## தற்போதைய சூழ்நிலையில் சாத்தியமில்லை எனவும் தெரிவிப்பு



(கொழும்பு)

**இடைத்தரகர்களைத்தவிர்த்து நான் நேரடியாகத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவே விரும்புகின்றேன். ஆனால் அது தற்போதைய சூழ் நிலையில் சாத்தியமில்லை. அவ்வாறானதொரு சந்தர்ப்பம் கிடைத்தால் இலங்கை இனப்பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பதற்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கும் என சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.**

வெளிநாட்டு செய்தி ஸ்தாபனம் ஒன்றுக்கு நேற்று அளித்த பேட்டியிலேயே சனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 10 வருடங்களுக்கு முன்னரே இவ்வாறான கொள்கையை நான் கொண்டிருந்தேன். ஆனால், அதற்கான வாய்ப்பு இதுவரை கிடைக்கவில்லை.

இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேச நான் தயாராக இருக்கின்றேன். இது பற்றிப் பேசும் (12ஆம் பக்கம் பார்க்க)



## இ.நிர்வாகம் பற்றிப் பேசுவதை ஈ.பி.டி.பி. எதிர்க்குமாம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் படுவதற்கு ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ.பி.டி.பி) எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இறுதித் தீர்வு ஒன்றிற்கு வராது இடைக்கால நிர்வாகம் அல்லது அதையொத்த நிர்வாக அலகு எதனையும் அக்கட்சி எதிர்க்கும் எனக் கட்சிவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இடைக்கால நிர்வாகம் வழங்குவதற்கு எந்தக் கட்சியாவது நடவடிக்கை எடுத்தால் அதைக் கடுமையாக எதிர்க்கும். ஈ.பி.டி.பி பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் இறுதித் தீர்வு காண எடுக்கப்படும் நடவடிக்கைக்கு பூரண ஆதரவு வழங்கும் என்றும் சர்வதேச சமூகம் விடுதலைப்புலிகளை இறுதித்தீர்வுக்கு வருமாறு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும், தனது நிலைப் பாட்டில் இருந்து எந்த வேளையிலும் கட்சி மாறப்போவதில்லை என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக "டெய்லி மிரர்" செய்தி வெளியிட்டுள்ளது.

## அமெ.தூதரகம் திறப்புக்குறித்து இதுவரை முடிவு எதுவுமில்லை

தற்காலிகமாக மூடப்பட்டுள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தை மீண்டும் திறப்பது குறித்து தீர்மானம் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என அமெரிக்க இராஜாங்க திணைக்க பேச்சாளர் அடெம் ஈரெய்லி தெரிவித்துள்ளார்

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே தூதரகத்தை தற்காலிகமாக மூடியுள்ளதாக வோஷிங்டனில் வைத்து சர்வதேச ஊடகங்களுக்கு ஈரெய்லி தெரிவித்தார். சந்தேகத்திற்குரிய துகள்களுடன் கடிதம் ஒன்று இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகத்துக்கு கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த துகள்கள் அந்த்ராக்ஸ் துகள்களாக இருக்கலாம் எனவும் அஞ்சப்படுகின்றது. அமெரிக்க தூதரகத்தை அடுத்துள்ள கட்டடத்தில் இயங்கும் அமெரிக்க உதவி (12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானம் தொடர்பான நிலைப்பாட்டில் எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை

### – சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சமாதானம் தொடர்பான நிலைப்பாட்டில் எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பலர் வெவ்வேறான கருத்துக்களை வெளியிட்டு வருகின்ற போதிலும், அரசாங்கத்தின் நிலைப்பாடு முன்பு போலவே இருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நிரந்தர சமாதானத்தை நோக்கி பயணிப்பதே சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என, நேற்று முன்தினம் கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திரக கூட்டமைப்பு என்ற வகையில் சமாதான (12ஆம் பக்கம் பார்க்க)

### - புலிகளின் சமாதான செயலகத்திற்கு -

## தீர்வையற்ற வாகனங்கள் விமல் வீரவன்ச அதிருப்தி

தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்துக்கு அரசாங்கம் தீர்வையற்ற வாகனங்களை வழங்கியமை குறித்து ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார். எனினும் சம்பூர் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த இடத்திற்கு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அனுமதி வழங்காமை குறித்து அவர் திருப்தி வெளியிட்டார். நேற்று பதுளையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வானொலி உபகரணங்களை ஐக்கிய தேசிய கட்சி வழங்கியமையும், (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்–அதிரடிப்படையின் சந்திப்பு; பொலிசாரின் நடவடிக்கை குறித்து ஆட்சேபம்!

எதிர்காலத்தில் இருதரப்பும் புரிந்துணர்வுடன் நடந்து கொண்டு சமாதானத்துக்கு உழைக்கத் தமிழீழ விடுதலைப் புலிகளும், விசேட அதிரடிப்படைத்தரப்பும் இணங்கியுள்ளன. நேற்று அக்கரைப்பற்று போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் அம்பாறை மாவட்ட தமிழீழ விடுதலைப புலிகளுக்கும், விசேட அதிரடிப்படைத் தரப்பினருக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதன்போது அண்மையில் தமிழீழ விடுதலைப்புலிகள் என அடையாளம் காட்டப்பட்ட போதும் சாதாரண மக்களைக் காட்டிலும மோசமாகத் தமது உறுப்பினர்கள் நடத்தப்பட்டமை குறித்து தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் அதிருப்தி வெளியிடப்பட்டது.பெண் போராளிகள், (12ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவிற்கு உதவிய இருவர் விளக்க மறியலில்

குருநாகல் நகரின் கருணா குழுவினருக்கு உதவினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குருநாகல் ஐஸ்கிறீம் உற்பத்திச்சாலையொன்றை நடத்தி வந்த ஏறாவூரைச் சேர்ந்த பரீட், அவரது உதவியாளரான பாவாதாஹிர் ஆகிய இருவரையும் எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட நீதவான் சுமுது பிரேமச்சந்திர உத்தரவிட்டார்.

இவர்கள் மட்டு அம்பாறை விசேட தளபதி ரமேஷ் அல்லது விசேட தளபதி ஒருவர் கொழும்பு செல்லும்போது கிளைமோர் குண்டை வெடிக்கச் (12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானம் தொடர்பாக நோர்வேயிடம் சந்திரிகா தமது நிலைப்பாட்டை விளக்கினாராம்

(கொழும்பு)

சனநாயக நாட்டில் சமாதானம் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்படுகின்றபோதும், சனாதிபதி சமாதான முன்னெடுப்புகள் தொடர்பான தமது நிலையை நோர்வே தரப்பிடம் தெளிவாக விளக்கியுள்ளதாக அரசாங்கத்தின் சமாதான செயலர் ஜயந்ததனபால தெரிவித்துள்ளார்.

சிவில் சமூக அமைப்பினர் நேற்று ஜயந்த தனபாலவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். அண்மையில் தாம் கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபோது (12ஆம் பக்கம் பார்க்க)

## முச்சக்கர வண்டி, உந்துருளிகள் கொழும்பில் விசேட சோதனை

கொழும்பில் முச்சக்கர வண்டிகளும் உந்துருளிகளும் விசேடமான சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றன. நேற்றுக் காலை முதல் இந்த நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. அண்மைகாலமாக கொழும்பில் முச்சக்கர வண்டிகளிலும், உந்துருளிகளிலும் வந்த சிலராலேயே துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களும், கொலைச்சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.இதனைக் கருத்திற் கொண்டே முச்சக்கர வண்டிகளும், உந்துருளிகளும் சோதனைக்கு உள்ளாக்கப்படுவதாக சிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர் (32)

## கொழும்பிலிருந்து குருநாகலூடான யாழ்.பாதையில் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து குருநாகலூடாக யாழ்.நகர் செல்லும் பிரதான பாதையில் காவல் துறையினரால் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொலிசாரின் மோட்டார் சைக்கிள் படையணியையும், விசேட படையணியும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதுடன், வாகனங்களை மறித்து திடீர் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் புதிய வீதித்தடைகளையும் பொலிசார் ஏற்படுத்தியுள்ளனர். இரவு வேளை இராணுவத்தினரின் சோதனைகளும் நடைபெற்று வருகின்றன.

அண்மையில் பாதுகாப்புச் சபை எடுத்த முடிவுக்கு அமையவே மேல் வடமேல் மாகாணங்களில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# TENDER NOTICE

## CEYLON ELECTRICITY BOARD
## (NORTHERN PROVINCE)
## Tender Nos.DGM/NP/2004/81to90

Chairman Provincial Tender Board (Northern Province), Ceylon Electricity Board, will receive sealed tenders separately up to 10.00 a.m on 25.08.2004 for the following construction work in Kilinochchi District.

| | TITLE | CONSTRUCTION OF | TENDER NO |
|---|---|---|---|
| 1. | *Karadippokku L.V.Line* | *ABC L.V Line* | *DGM/NP/2004/81* |
| 2. | *C.T.B Depot Area* | *ABC L.V Line* | *DGM/NP/2004/82* |
| 3. | *155 Mile post, Kilinochchi* | *ABC L.V Line* | *DGM/NP/2004/83* |
| 4. | *From Murukandy to west Kilinochchi* | *M.V Line* | *DGM/NP/2004/84* |
| 5. | *Kanagapuram junction CTB Depot road junctin sub* | *M.V Line ABC L.V Line* | *DGM/NP/2004/85* |
| 6. | *Kanagapuram Surveyerkadai junction* | *M.V Line ABC L.V Line* | *DGM/NP/2004/86* |
| 7. | *Kanagambikaikulam* | *M.V.Line & ABC L.V Line* | *DGM/NP/2004/87* |
| 8. | *Vaddakkachi Stage 1* | *M.V Line* | *DGM/NP/2004/88* |
| 9. | *Vaddakkachi Stage 2* | *M.V Line* | *DGM/NP/2004/89* |
| 10. | *Vaddakkachi Stage 3* | *ABC L.V Line* | *DGM/NP/2004/90* |

Tenders will be opened at the office of the Deputy General Manager (North), Ceylon Electricity Board 536/01, K.K.S Road, Jaffna / Electricity Engineer's Office, Park Road, Vavuniya immediately after the closing time. Tenderers or their authorized representatives will be permitted to be present at the time of opening of the tender.

Tenders could purchase tender documents on payment of a non- refundable - tender fee of Rs.1000/- per set for each tender by cash or tendering a Money order or Bank Draft drawn in favor of General Manager, Ceylon Electricity Board, Colombo to the addresses mentioned below till 24.08.2004 on any working day between 09.00 a.m to 03.00 p.m. Tender should be submitted in duplicate only on the document purchased from Ceylon Electricity board.

Deputy General Manager (North)
Ceylon Electrical Board,
536/01, K.K.S Road,
Jaffna.
Tel.No. 021-2222496,021-2223233
Fax No. 021-2222497

or

Electrical Engineer,
Kilinochchi Area,
Ceylon Electrical Board,
Park Road,
Vavuniya.
Tel.No. 024-2222285,024-2223597
Fax No. 024-2222285

Title of the Tender the relevant tender No. Should be indicated on the top left hand corner of the envelope of the duly completed tender documents and should reach the following addresses on or before 25.08.2004 at 10.00 a.m.

Chairman,
Provincial Tender Board,
(Northern Province)
Ceylon Electricity Board,
536/01, K.K.S Road,
Jaffna.

or

Chairman,
Provincial Tender Board,
(Northern Province)
C/O Electricity Engineer,
Ceylon Electricity Board,
Park Road, Vavuniya.

**Ceylon Electricity Board Committed to a Sustainable Environment and Development Process**

(சி-9784)

---

# பணிநிலைவேண்டுகை

**அருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில் இரணைமடு, கிளிநொச்சி.**

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுவில் அமைந்துள்ள அருள்மிகு கனகாம்பிகைஅம்பாள் பெருங்கோவிலிற்கு கீழ்க்காணும் பணிநிலைக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

***பணிநிலை*** :- பிரதம அர்ச்சகர் - (பிரதம குருக்கள்)

தகைமை உடையவர்கள் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும் (முன் அனுபவம் உட்பட) ஊதியம் நேரில்பேசித் தீர்மானிக்கப்படும். வதிவிட வசதி உண்டு. தினமும் மூன்றுகாலப்பூசை நடைபெறும் பெருங்கோவில். எனவே நிரந்தரமாக ஆலய வதிவிடத்தில் தங்கியிருத்தல் வேண்டும். வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேற்படி பணிநிலைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 28.08.2004 திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும், வேண்டுகைகள் அனுப்பப்படவேண்டிய முகவரி.

தலைவர்/செயலாளர்,
அறங்காவலர் சபை,
கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில்,
இரணைமடு, கிளிநொச்சி.

*(சி-9781)*

---

# மாபெரும் விவசாயக் கண்காட்சி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

*கால்நடை உற்பத்தித் திணைக்களம்

*விவசாயத்திணைக்களம்

*கைத்தொழில் திணைக்களம்

**என்பன இணைந்து நடாத்தும்
மாபெரும் விவசாயக் கண்காட்சி**

இடம்:- ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி

காலம்:- 01-09-2004 தொடக்கம் 04-09.2004வரை

ஆர்வலர்களே!

*தங்கள் சந்தேகங்களைத் தீர்ப்பதற்கும்,
மேலதிக விவசாய அறிவினைப் பெறுவதற்கும்,

*சிறந்த தொழில்நுட்ப முறைகளைக் கண்டறிவதற்கும்,

*செய்கை முறையிலும்,ஒளிப்பட,புகைப்பட காட்சியுடனும், திட்ட விளக்கவுரைகளுடனும் நடைபெறவுள்ளது.

*ஆர்வமுள்ளவர்கள் சிறந்த உற்பத்தியாளர்கள் தங்களிடம் உள்ள விவசாய,கால்நடை உற்பத்திகளை காட்சிக்கு வைப்பதற்கும் , விற்பதற்கும் நாடுங்கள்.*

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
வட்டக்கச்சி.

*(சி.9779)*

---

# மடு அன்னை பெரு விழாவுக்கான
## சிறப்புப் பேருந்துப் பணி
## தமிழீழப் போக்குவரத்துக் கழகம்

மேற்படி பேருந்துப்பணி 12.08.2004, 13.08.2004, 14.08.2004 ஆகிய மூன்று நாட்களும் பின் வரும் நேர ஒழுங்கிற்கு அமைவாக நடைபெறும் என்பதனை பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன்அறியத்தருகின்றோம்.

**நேர ஒழுங்கும், வழித்தடமும்**

**அளம்பில் — மடு**

| அளம்பில் அந்தோனியார் கோவில் | முல்லைத்தீவு | இரட்டை வாய்க்கால் |
|---|---|---|
| காலை 7.00 | 8.00 | |

| வலயன்மடம் மாத்தளன் | இரணைப்பாலை | புதுக்குடியிருப்பு |
|---|---|---|
| 8.40 | 9.15 | 9.40, 9.50 |

| பரந்தன் | கிளிநொச்சி | வன்னேரி | செயபுரம் | நாச்சிக்குடா |
|---|---|---|---|---|
| 11.10 | 11.30,11.40 | 12.55 | 1.55 | 2.10 |

| ஆண்டான் குளம் | பரப்புக் கடந்தான் | மடு |
|---|---|---|
| 4.10 | 4.45 | 5.40 |

**வட்டக்கச்சி — மடு**

| வட்டக்கச்சி சூசையப்பர் கோவில் | கிளிநொச்சி | பரந்தன் |
|---|---|---|
| பகல் 11.30 | 12.15, 12.40 | 1.00 |

| பூநகரி | நாச்சிக்குடா | ஆண்டான் குளம் | பரப்புக் கடந்தான் | மடு |
|---|---|---|---|---|
| 2.30 | 4.00 | 6.00 | 6.45 | 7.30 |




முகாமையாளர்,
தமிழீழ போக்குவரத்துக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-10071)

# முக்ததா அல்-சதாரின் போர் பிரகடனம்;
# நஜாப்பில் சண்டை தீவிரமடையலாம்

(பாக்தாத்)

**தான் கொல்லப்பட்டாலும் ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைகளுக்கெதிராக தொடர்ந்து போரிடுமாறு கடும் போக்கு சியா மதத் தலைவரான முக்ததா அல்-சதார் தமது கிளர்ச்சியாளர்களுக்கு அறிவித்துள்ளார். இதனால் நஜாப்பில் போர் தீவிரமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.**

இந்தப் புனித பிரதேசத்தில் கடந்த ஒரு மாதமாக இடம் பெற்றுவரும் மோதல்களில் நூற்றுக் கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

சத்தாரும் அவரது ஆதரவாளர்களுடன் நஜாப் நகரை சுற்றியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அவர்கள் மீது இறுதித் தாக்குதலை நடத்துவதற்கு தயாராகி வருவதாக ஈராக்கிய அமெரிக்கப் படையினர் அறிவித்துள்ளனர். இதனால் நஜாப் நகரில் நடைபெறும் தாக்குதல் மேலும் தீவிரமடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நஜாப்பில் அமெரிக்கப் படைகளுக்கு எதிராகக் கடும் சமர் இடம்பெற்றுவரும் வேளையில் கடைசித் துளி இரத்தம் இருக்கும் வரை நஜாப் நகரை பாதுகாப்பதற்கு போரார்டப் போவதாக முக்ததா அல்-சதார் அறிவித்திருந்தார்.

ஈராக் இடைக்கால அரசின் பிரதமர் இயாத் அலாவி, முக்ததா சதாரின் மெஹ்கி இராணுவம் நஜாப நகரை விட்டு வெளியேற வேண்டும், ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என அறிவித்திருந்தார். இந்த அறிவிப்புக்கு பதிலளிக்கும் வகையிலேயே சதார் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை நஜாப்பில் இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கக் கூட்டுப்படையினரும், ஈராக்கிய படையினரும் இணைந்து ஓர் இறுதித் தாக்குதலை நடத்துவதற்கு ஆயத்தமாகி வருகின்றன. நஜாப்பிலுள்ள முக்ததா அல்-சதாரின் தலைமையின் கீழ் ஆயுதக் குழுக்கள் தொடங்கிய சண்டையை முடிக்கும் நோக்குடன் கூட்டுப் பயிற்சிகள் நடைபெற்று வருவதாக அமெரிக்க இராணுவத் தரப்பில் பேசவல்ல அதிகாரி கேணல் அன்ரனி ரம்ஸ்பீல்ட் தெரிவித்துள்ளார்.



சண்டை நடைபெறும் ஈராக்கின் நஜாப் நகரிலிருந்து குடிமக்களை வெளியேறுமாறும் சியா முஸ்லிம் போராளிகளை சரணடையுமாறும் அமெரிக்கப் படைகள் உலங்கு வானூர்தி மூலம் அறிவித்திருக்கும் நிலையில் அங்கு தனது வெற்றியை அறிவிக்கும் போராளி ஒருவர்.



இந்தியா ராணுவத்தினர் ஒருவர் காஷ்மீர் பகுதியில் பொதியொன்றை சோதனை இடுகின்றார்.

## சதாம் ஹுசைனுக்கு ஆதரவாக வாதாட சென்னை வழக்கறிஞர் நியமனம்

அமெரிக்கப் படைகளால் சிறைபிடிக்கப்பட்டுள்ள ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைனுக்கு ஆதரவாக வாதாட சென்னையைச் சேர்ந்த பிரபல வழக்கறிஞர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஈராக் மீது போர் தொடுத்து அந்நாட்டை அமெரிக்கப் படைகள் கைப்பற்றியுள்ளன. ஈராக் நாட்டின் ஆட்சிப்பொறுப்பும் சதாம் ஹுசைன் மீதான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரமும் ஈராக் இடைக்கால அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள போதும் சதாம் ஹுசைன் தொடர்ந்தும் அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டிலேயே வைக்கப்பட்டுள்ளார். விரைவில் இவர் மீதான வழக்கு விசாரணைகள் தொடங்கவுள்ள நிலையில், இவருக்கு ஆதரவாக ஈராக் நீதிமன்றத்தில் ஆஜராக சென்னையைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலரும் பிரபல வழக்கறிஞருமான ஸ்ரீபக்தவச்சலத்தை, மனித உரிமைகள் அமைப்பு நியமித்துள்ளது.

ஈராக் மீது போர் தொடுத்தது முதலே அமெரிக்கா மனித உரிமைகளை மீறும் வகையில் செயல்பட்டதாக குற்றம் சாட்டியுள்ள ஸ்ரீபக்தவச்சலம், அமெரிக்கா சதாம் ஹுசைன் மீது வழக்குத் தொடர அதிகாரம் இல்லை என்றும் கூறியுள்ளார்.

## ஆஸ்திரியாவில் சுற்றுலா பேருந்து விபத்து; ஐந்து பேர்பலி; பலர் படுகாயம்

ஆஸ்திரியாவில் சுற்றுலா பேருந்து விபத்துக்குள்ளானதில் பயணிகள் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் உயிரிழப்புத் தொகை அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

பிரிட்டிஷ் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக் கொண்டு ஆஸ்திரியா சென்று கொண்டிருந்த பேருந்து அந்நாட்டின் காஸ்பேக் நகரில் 90 அடி பள்ளத்தில் விழுந்தது. இதில் பேருந்து தலை குப்பற விழுந்ததில் பயணிகள் ஐந்து பேர் சம்பவ இடத்திலேயே நசுங்கி உயிரிழந்துள்ளனர்.43 பேர் படுகாயமடைந்துள்ளனர்.



உலகில் பயங்கர வாதத்தை அழிக்கவும் நட்பு நாடுகளின் இராணுவத்தினரிடையே வலையமைப்பை உருவாக்கவும் அமெரிக்க காங்கிரசிடம் பென்ரகன் மேலும் 50 மில்லியன் டொலரை ஒதுக்குமாறு கோரியுள்ள நிலையில் ஆப்கானிஸ்தான் இராணுவ வீரருக்கு அறிவுரை வழங்கும் அமெரிக்கப் படையதிகாரி.



தாய்பே நகரில் இராணுவத்தினரின் கொண்டாட்டத்தின் போது கடந்த ஜீன் மாதம் சனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட எல்சல்வடோர் சனாதிபதி ரொனி சகாவுடன் கைகுலுக்கும் தைவான் சனாதிபதி சென்சுய் பயன்.

## பயங்கரவாதிகளுக்கான அடிப்படைக் கட்டமைப்பு பாகிஸ்தானில் நீடிப்பதாக இந்தியா குற்றச்சாட்டு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் பயங்கரவாதிகளுக்கான அடிப்படைக் கட்டமைப்பு நீடிப்பது குறித்து இந்தியா கவலை வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் இஸ்லாமாபாத்தில் தொடங்கிய இந்தியா, பாகிஸ்தான் இடையேயான பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பேச்சுவார்த்தைகளில் இந்தியத்தரப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

எல்லைக்கட்டுப்பாட்டுப் பகுதியில் பயங்கரவாதிகளின் ஊடுருவல் தொடர்வது குறித்தும் இப் பேச்சுவார்த்தைகளில் இந்தியா கவலை வெளியிட்டுள்ளது.

எந்த நாட்டிற்கும் எதிராகச் செயற்பட தனிநபரையோ, அல்லது குழுவையோ பாகிஸ்தான் அனுமதிக்காது என்று பாகிஸ்தான் வெளியுறவு செயலர்மட்டக் குழுவின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

## சிங்கப்பூரின் மூன்றாவது பிரதமராக லீசியன் லூங் இன்று பதவியேற்பு

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரின் 3ஆவது பிரதம மந்திரியாக லீசியன்லூங் இன்று பதவிப்பிரமாணம் செய்து கொள்கின்றார்.

சிங்கப்பூரின் இரண்டாவது பிரதம மந்திரியாகவிருந்த சான்டோங் தேசிய தினத்தன்று பதவி விலகியதைத் தொடர்ந்து இவரது நியமனம் இடம்பெறுகின்றது. இரண்டு தசாப்த காலத்திற்கு முன்னர் அரசியலில் ஈடுபட்ட லீசியன்லூங் இராணுவத்திலும் உயர் அதிகாரியாக கடமையாற்றியுள்ளார். இவர் சிங்கப்பூரின் முதலாவது பிரதம மந்திரியான லீகுவான் யூவின் மகனாவார். இவரது தந்தையாருக்கு 80வயது நிரம்பியுள்ள போதிலும் சிரேஸ்ட அமைச்சர் என்ற நிலையிலிருந்து அரசாங்கத்தைக் கண்காணித்து வருவார். அமைச்சரவையில் அவர் மூன்றாவது இடத்தைக் கொண்டிருப்பார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## காப்புறுதி செய்யப்படாத வாகன விபத்துக்களால் வருடம் ஒன்றிற்கு 20 கோடி பவுண்ட் செலவீனம்

### லண்டன் போக்குவரத்து திணைக்களம் தகவல்

(லண்டன்)

லண்டனில் காப்புறுதி செய்யப்படாத வாகனங்கள் உட்பட்ட போக்குவரத்து விதிகளை மீறும் வாகன சொந்தக்காரர்களின் வாகனங்களை கைப்பற்றவும், அதனை அழிக்கவும் லண்டன் பொலிசாருக்கு அதிகாரங்கள் வழங்கும் சட்டங்கள் தயாரிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

காப்புறுதி செய்யப்படாத வாகனங்களைக் கண்டுபிடிக்கவென வாகனப்பதிவு இடாப்புக் காப்புறுதித் தகவல் நிலையமும் கணனிமூலம் இணைக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

காப்புறுதி செய்யப்படாத வாகனங்கள் சம்பந்தப்பட்ட வீதி விபத்தினால் வருடமொன்றிற்கு 20 கோடி பவுண் செலவீனங்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மது போதையில் வாகனங்களைச் செலுத்துவோரிலும் பார்க்க காப்புறுதி செய்யப்படாத வாகனங்களைச் செலுத்துவோர் 10 மடங்கு அதிகமாகவுள்ளனர். பாதுகாப்பற்ற வாகனங்களைச் செலுத்துவோரின் குற்றச்செயல்களினை புரிவோரிலும் பார்க்க இவர்கள் 06 மடங்கு அதிகமானவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. போக்குவரத்து திணைக்களத்தின் இந்த நடவடிக்கையைப் பொலிஸ் அதிகாரிகள் சங்கம் வரவேற்றுள்ளது.

## ஈராக்கில் கடத்தப்பட்ட இந்தியர்கள் ஏழுபேரையும் விடுதலை செய்ய குவைத் நிறுவனம் புதிய முயற்சி

(பாக்தாத்)

ஈராக்கில் கடத்தப்பட்ட மூன்று இந்தியர்கள் உட்பட ஏழுபேரை விடுதலை செய்வதற்கு குவைத் நிறுவனம் புதிய முயற்சி ஒன்றை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மத்தியஸ்தராக செயற்பட்ட ஷேக் அல்தொலமியை தீவிரவாதிகள் தங்களது அதிகார பூர்வ பிரதிநிதியாக அறிவித்தால் அதனைக் கொண்டே பேச்சுவார்த்தைகளைத் தொடரத்தயார் என்று குவைத் நிறுவனம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. இதனால் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட ஏழு பேரும் விடுதலை செய்யப்படுவதில் சிக்கல்கள் நீங்குவதாக இந்தியா கூறியுள்ளது. இதேவேளை தீவிரவாதிகள் கூடுதல் பணம் கேட்டிருப்பது குறித்தும் அதற்கு இணக்கம் காட்டுவதா, இல்லையா என்பது பற்றியும் குவைத் நிறுவனம் கருத்துக் கூற மறுத்துள்ளது. ஆனால் இந்தியர்கள் உள்ளிட்ட ஏழுபேரும் வெகுவிரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்று குவைத் நிறுவனம் கூறியுள்ளது.

-நெதர்லாந்து அரசின் உதவியுடன்-

# மாவட்ட விவசாய கேந்திர நிலையங்களுக்கு இயந்திர உபகரணங்கள் வழங்க ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

**நெதர்லாந்து அரசின் உதவியுடன் நிகொட் நிறுவனத்தினரால் கிளி.மாவட்ட விவசாய கேந்திரநிலையங்களுக்கு (ஏ.பி.சி) விவசாய இயந்திர உபகரணங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன.**

கிளிநொச்சி, உருத்திரபுரம், இராமநாதபுரம், புளியம்பொக்கணை, பூநகரி, முழங்காவில், அக்கராயன்குளம், பளை ஆகிய விவசாயக் கேந்திரநிலையங்களுக்கு தலா இரண்டு உழவு இயந்திரங்கள் வீதம் 16 இருசக்கர உழவு இயந்திரங்களும், அதே போன்று 16 பாரங்காவிகள், 8 இயந்திர தெளிகருவிகள், 40 சாதாரண தெளிகருவிகள், 80 நீர் இறைக்கும் இயந்திரங்கள் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் கிளிநொச்சி, உருத்திரபுரம், முழங்காவில், அக்கராயன் குளம் ஆகிய விவசாய கேந்திர நிலையங்களுக்கு தலா ஒவ்வொரு நாலுசக்கர உழவு இயந்திரங்கள் வீதம் 4உழவு இயந்திரங்களும் வழங்கப்பெறவுள்ளதென கிளி. மாவட்ட நிகொட் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (சோ.கு)

# நெடுங்கேணி—மருதோடை வீதி ஆமைவேகத்தில் புனரமைப்பு

(முள்ளியவளை)

நெடுங்கேணியில் இருந்து மருதோடைக்குச் செல்லும் வீதி புனரமைப்பு வேலைகள் ஆமை வேகத்திலேயே நகர்கின்றன.

மேற்படிவீதிப் புனரமைப்பானது பலமாதங்களின் முன்பு திட்டமிடப்பட்டபோதும் வீதியில் சிலசில இடங்களில் குவியல் குவியலாக கிரவல் பறிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது. இதனால் பொதுமக்கள் அடிப்படைத் தேவைகளைப்பெற குன்றும்குழியுமாகவும் கிரவல் குவியலுமாகவுமுள்ள சுமார் 7.5கிலோமீற்றர் தூரம் உள்ள நெடுங்கேணி நகரப்பகுதிக்குப் பெரும் சிரமத்தின் மத்தியில் அவலப்பட்டுச்சென்று வருவதை அவதானிக்க முடிகின்றது.

மேற்படி பகுதிகளில் வசித்து வருகின்ற மக்கள் சிறிலங்காப் படைகளின் ஜெயசிக்குறு இராணுவநடவடிக்கையில் இடம் பெயர்ந்து மீள்குடியமர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஆ)

# சட்டவிரோத மீன்பிடி முறைகளால் மீனினங்கள் பல முற்றாக அழிவு !

(மட்டக்களப்பு)

மட்டு.நகர் வாவியில் தடை செய்யப்பட்ட வலைகளைக் கொண்டு சட்டவிரோதமான முறையில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மாவட்ட மீனவர் கூட்டுறவு சமாசத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வாவி மீன்பிடித் தொழிலை நம்பி இம்மாவட்டத்தில் 17 ஆயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன. தடைசெய்யப்பட்ட தட்டு வலை, மாயவலை, டிஸ்கோ வலை, தங்கூஸ் வலை போன்ற வலைகளைப் பயன்படுத்தி வாவியில் மீன்பிடிப்பதால் வாவியிலுள்ள சிறிய மீனினங்கள் முற்றாக அருகிவருகின்றன.

மட்டக்களப்பு வாவியில் 50 இற்கும் அதிகமான மீனினங்கள் முற்றாக அழிந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.சட்டவிரோத தடை செய்யப்பட்ட வலைகளைக் கொண்டு மீன்பிடிப்பதைப் பல வழிகளிலும் தடைசெய்த போதிலும், அவை பூரண வெற்றியளிக்கவில்லை.

# இரு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மாந்தை கிழக்கில் திறந்துவைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வன்னிவிளாங்குளம், பனங்காமம் கிராமங்களில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களின் திறப்புவிழா நிகழ்வு கடந்த திங்களன்று காலை 9.00 மணியளவில் வன்னிவிளாங்குளம் கிராமத்திலும், காலை 11.00மணியளவில் பனங்காமத்திலும், மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சுஜந்தன் தலைமையில் இடம்பெற்றது.

பொதுச்சுடரினை வன்னி விளாங்குளம் கிராமசேவையாளர் திருமதி வ.தவராஜா ஏற்றிவைக்க தேசியக்கொடியினை துணுக்காய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் புனிதன் ஏற்றிவைத்தார். இதனையடுத்து ஆரம்பசுகாதார நிலையப் பெயர்ப்பலகையினை மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரைநீக்கம் செய்துவைக்க, ஆரம்ப சுகாதார நிலையத்தினை முல்லை மாவட்ட பிரதி மாகாண சுகாதாரசேவைப்பணிப்பாளர் ஜெயக்குலராஜா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பனங்காமம் பகுதியில் அமைக்கப்பட்ட ஆரம்பசுகாதார நிலையத்தின் திறப்புவிழா நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது பொதுச்சுடரினை பனங்காமம் ப.நோ.கூ.ச. தலைவர் ஏற்றி வைக்க தேசியக்கொடியினைப் பாண்டியன் குளப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். பெயர்ப்பலகையினை யுனிசெப் பிரதிநிதி திரைநீக்கம் செய்துவைக்க, சுகாதார நிலையத்தின் நாடாவை பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளர் வெட்டித்திறந்து வைத்தார்.

கருத்துரைகளை வன்னி விளாங்குளம் கிராமசேவையாளர், மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர், யுனிசெப் பிரதிநிதி, மல்லாவி சுகாதாரபரிசோதகர், துணுக்காய்ப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர், முல்லை மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர். இந்நிகழ்வுகளில் பொதுமக்கள், அரச-அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் கிராம அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள் நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.மேற்படி நிலையங்கள் இரண்டும் யுனிசெப் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

-வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளில்-

# தொழிற்றுறை கற்கைநெறிகளை மேம்படுத்த மாகாணக் கல்வித் திணைக்களம் முயற்சி

வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்கப் பாடசாலைகளில் தொழிற்றுறை கற்கை நெறிகளைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகளை மாகாணக்கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இப்பாடங்களைக் கற்பிக்க விரும்பும் ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்குவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாகாணக்கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

தரம்-10 மற்றும் 11ஆகிய வகுப்புக்களில் கற்பிக்கப்படும் தொழில்நுட்பப் பாடங்களில் தொழிற்றுறைக் கற்கைநெறிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதில் இயந்திரவியல், கட்டட நிர்மாணம், மின் இலத்திரனியல், நுண்கலை ஆகிய பாடங்களை வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளிலும் கற்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இளைஞர், யுவதிகளின் எதிர்கால வேலைவாய்ப்புக்களைக் கருத்திற்கொண்டு இப்பாடநெறிகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் மாகாணக்கல்விப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

தொழில்நுட்பப் பாடங்களைக் கற்கும் மாணவர்கள் தமது விருப்பத்திற்கேற்றவாறு தொழிற்றுறைப்பாடங்களைக் கற்பதற்குரிய சந்தர்ப்பம் வழங்கப்படாமல் இருப்பதும் வழிகாட்டல் ஆலோசனைகள்இல்லாமல் இருப்பதும் பெரும் குறைபாடாகவுள்ளது.

இந்தநிலைமைகளைக் கருத்திற்கொண்டு தொழிற்றுறைப் பாடங்களுக்காக நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாகாணக்கல்விப் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# வைத்தியருக்கான விடுதி அமைப்பதில் தாமதம்

மணலாற்று மத்திய மருந்தகத்தின் வைத்தியர்களுக்கான விடுதி அமைப்பதன் செயற்பாடுகள் ஆமைவேகத்திலேயே நடைபெற்றுவருகின்றன.

நிக்கொட்நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வரும் இவ் விடுதி அரைவாசி வேலையுடன் அப்படியே இருப்பதால் இதற்கான நிதியும் திரும்பிச் செல்லக்கூடும் என முல்லை மாவட்ட பிரதி மாகாண சுகாதாரசேவைப் பணிப்பாளர் து.வி.ஜெயக்குலராஜா தெரிவித்தார்.



இப்பகுதிமக்கள் பயன்பெறவேண்டிய இக்கட்டடத்தினை சம்பந்தப்பட்டவர்கள் விரைவாகக் கட்டித்தரவேண்டும் என்றும்இவர் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (20)

# கற்றல் உபகரணம் வழங்கல்

யுனிசெப் நிதியுதவியுடன் கிராமிய பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு குழந்தையும் பாடசாலைக்கல்வி கற்றலில் இணைத்தல் திட்டத்தின் கீழ் 2004 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.இதில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் ஒழுங்கற்ற வரவும், இடைவிலகலுமாகக்காணப்படும் மாணவர்கள் ஆண்கள் 931, பெண்கள் 970 கரைதுறைப்பற்று பிரதேசத்தில் ஆண்கள் 915, பெண்கள் 848ஆவர்

மேற்படி விபரத்தின் படி 111 இடைவிலகிய மாணவர்கள் பாடசாலையில் இணைக்கப்பட்டு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் 3553 ஒழுங்கற்ற வரவுள்ள மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (தீச)







இடைக்கால சைவநெறிப்போட்டியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற கிளி.சென்திரேசா மகளிர் கல்லூரி மாணவி வைஸ்ணவிக்கு கிளி.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் தங்கப்பதக்கம் அணிவித்து கௌரவிப்பதனையும்,மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் சோதி,வரன்)

# இலங்கைத் தமிழர்களின் போராட்டத்திற்கு வை.கோ.வின் விடுதலை வலுச்சேர்த்துள்ளது

பெ.சந்திரசேகரன் கடிதம் மூலம் அறிவிப்பு

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக செயலர் வை.கோபாலசாமி பொடோ சட்டத்தில் இருந்து விடுவிக்கப்பட்டமையானது, இலங்கைத் தமிழர்களின் போராட்டத்திற்கு வலுச்சேர்த்துள்ளதாக மலையக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

இது குறித்து முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் வை.கோபாலசாமிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தெளிவான கொள்கைகளுக்கு சட்டத்தால் தடைபோட முடியாது என்பதை இந்தத் தீர்ப்பு உணர்த்துவதாக அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஈழத்தில் தமிழர் விடுதலைக்காக போராடும் போராளிகளின் நியாயத்திற்கு இந்தத் தீர்ப்பானது உந்துதலை அளித்துள்ளதாகவும் பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

# முன்பள்ளி திறனாய்வு நிகழ்வு

(கிளிநொச்சி)

கோணாவில் சாலோம்நகர் தென்னிந்திய திருச்சபையின் பகல் பராமரிப்பு நிலைய முன்பள்ளி திறனாய்வு நிகழ்வுகள் கடந்த திங்களன்று பிற்பகல் 2.30மணியளவில் வண.பிதா ரி.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவநாதன், வண.பிதா ரி.ஜெயச்சந்திரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழ தேசியக்கொடியினை தேவராசா ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து சிறார்களின் திறனாய்வு நிகழ்வுகள் மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றன. இம் முன்பள்ளியில் 125 சிறுவர்கள் கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (15)

# இராணுவ நிலைகளுக்கு அண்மையாக படையினர் வியாபார நடவடிக்கை!

## -சமுதாய சீரழிவை உருவாக்கும் செயல்

(தென்மராட்சி)

**யாழ். குடாநாட்டில் சிறிலங்காப் படையினர் வர்த்தக நிலையங்களை அமைத்து வியாபார நடவடிக்கைகளில் பரவலாக ஈடுபட்டு வருவதையிட்டுப் பொது மக்கள் பெரும் விசனமடைந்துள்ளனர். இவ்வாறான நடவடிக்கையால் சமுதாய சீர்கேடுகளுக்கும், பண்பாட்டுச் சிதைவுகளுக்கும் வழியேற்பட்டுள்ளதாக அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.**

குடாநாடு முழுவதும் உள்ள சிறிலங்காப் படைகளின் இராணுவ நிலைகளுக்கு அண்மையில் புதிதுபுதிதாகக் கடைகள் நிறுவி வியாபார நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டு வருவது அண்மைக்காலங்களில் அதிகரித்து வருவது தெரியவருகிறது.

பார்ப்பதற்கு தென்னங்குற்றிகளையும் மக்களின் குடியிருப்புக்களை உடைத்து எடுக்கப்பட்ட ஓடுகள், சீட்டுகள், மரங்களைக் கொண்டு இந்தக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் கடைகளின் உள்ளே உள்ள பொருட்களின் மதிப்போ பல இலட்சம் வரும் எனத் தெரியவருகிறது. வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சிறிலங்காப் படைகளின் நோக்கம் குறித்து மக்கள் இன்று சந்தேகம் அடைந்துள்ளனர்.

இக்கடைகளில் மக்களைக் கவர்வதற்காக பொருட்களை படையினர் மலிவு விற்பனையிலும் விநியோகிப்பதாகத் தெரியவருகிறது.

முகமாலையில் இருந்து தொடங்கும் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசமான யாழ்ப்பாணம் செல்லும் ஏ-9 பிரதான சாலையில் உசன் சந்தியிலும் கொடிகாமத்தில் பழைய புகையிரத நிலையத்திற்கு அருகிலும், புத்தூர் சந்தியிலும், சாவகச்சேரி பேருந்து நிலையத்திற்கு அருகிலும், நுணாவில் சிறிலங்காப் பொலிஸ் நிலையத்திற்கு அருகிலும், 190ஆம் கட்டைச்சந்தியிலும், மற்றும் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் காணப்படும் இராணுவக் கடைகளில் வியாபாரம் என்ற போர்வையில் மறைந்திருக்கும் இரகசியம் என்ன என்று மக்கள் கேள்வி தொடுக்கின்றனர்.

யாழ்.குடாநாட்டில் சமுதாய சீர்கேடுகளுக்கும், பண்பாட்டுச் சிதைவுக்கும் பிரதான தளமாக இக்கடைகள் மாறிவருவதை அவதானிக்க முடிகிறது. (28)

# மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 66ஆவது பிறந்த தினம் இன்று



தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறைக்கு எதிராக யுத்த சூழ் நிலையிலும் சிறிலங்காவின் தலைநகர் கொழும்பிலிருந்து கொண்டு ஓயாது குரல் கொடுத்த மாமனிதர் அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களின் 66ஆவது பிறந்த தினம் இன்றாகும்.

தமிழத்தேசியம், தாயகம், தன்னாட்சி உரிமை என்பவற்றுக்கு ஆதரவாக எந்நிலையிலும் எங்கும் ஓங்கிக்குரல் கொடுத்து வந்த அவரின் நடவடிக்கையால் சினமுற்றிருந்த சிங்கள ஆட்சி அதிகாரம் அவரை 05.01.2000 ஆம ஆண்டன்று படுகொலை செய்தது. ஆனால் தனக்கிருந்த உயிராபத்தையும் பொருட்படுத்தாது அவர் நடத்திய போராட்டமானது என்றும் தமிழ் மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளது.

சிங்கள அரசுகளால் தமிழ் மக்கள் மீது ஏவி விடப்பட்ட கொடூர ஒடுக்கு முறைச் சட்டங்களால் கைதுசெய்யப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட இளஞ்சமூகத்திற்காக வாதிட்ட போதிலும் சரி, தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட கொடூரங்களை உலகத்திற்கு வெளிப்படுத்திய போதிலும் சரி, தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயத் தன்மையைப் புரிய வைத்த போதிலும் சரி அவர் அவற்றை உணர்வு பூர்வமாகவே செய்து முடித்தார்.

தமிழ் மக்களுக்கு எதிராகவும், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையிலும் பேரினவாதிகளும், பேரினவாத ஊடகங்களும் செய்த பிரச்சாரங்களை உடனுக்குடன் முறியடித்தது மட்டுமல்லாது அதிகார வர்க்கத்தின் போலித்தனமான நடவடிக்கைகளை, அவர்களின் போலிச்சமாதான முகமூடிகளைத் தனக்கேஉரித்தான பாணியில் அம்பலப்படுத்தி வந்தார்.

தீர்க்கமான-தெளிவான முடிவுடன் சிறிலங்காவின் தலைநகர் கொழும்பில் செயற்பட்ட மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் 66ஆவது பிறந்த தினம் இன்று யாழ்ப்பாணத்திலுள்ள. அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

# அரச அதிபரின் பணிப்பின் பின்னரும் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்கிறது!

(தென்மராட்சி)

கெற்பெலிப் பகுதியில் சட்டவிரோதமாக பகல், இரவு என்று பாராமல் மண் கடத்தல் நடைபெற்று வருகிறது. யாழ்ப்பாண அரசாங்க அதிபரால் மணல் அனுமதிப் பத்திரம் நிறுத்தப்பட்ட பின்னரே தென்மராட்சிப் பகுதிகளில் அதிகளவான மண் அகழ்வு இடம்பெற்று வருவதாகத் தெரியவருகிறது.

கெற்பெலி மத்தி வன்னியன் கோயில் பின் பகுதி உசன் கந்தசுவாமி காணியின் பிற்பகுதியில் அருகம் சாட்டி, பாலசாட்டி வயல வெளிகளிலும் மண் கடத்தல் தொடர்ந்தும் நடைபெறுகிறது. மாட்டு வண்டிகளிலும்,உழவு இயந்திரங்களிலும், பாரஊர்திகளிலும் தொடர்ந்தும் இச் சட்டவிரோத செயல்கள் இடம்பெற்று வருகின்றன. இதை உடனே கவனத்தில் எடுத்து கடும் நடவடிக்கை எடுக்கும்படி தேசிய எழுச்சிப் பேரவையின் கெற்பெலி ஊரகக் கிளை சம்பந்தப்பட்ட தரப்புக்களைக் கோருகின்றது. (28)

# பொதி இறக்கும் பகுதியில் கைகலப்பு ஒருவர் கடிக்கு இலக்கானார்

(தென்மராட்சி)

முகமாலையில் படையினரின் சோதனைச் சாவடிக்கு அண்மையில் உள்ள பாரஊர்திகளில் சுமை இறக்கும் சோதனைமையத்தில் நேற்று முன்தினம் காலை இரு தொழிலாளர்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் தொழிலாளி ஒருவர் கடிக்கு இலக்காகி காயமடைந்தார். அவர் அணிந்திருந்த உடைகளும் கிழிக்கப்பட்டன. அங்கு பாதுகாப்புக் கடமையில் இருந்த படையினர் இருவரையும் சமரசப்படுத்தினர். இதனால் காலை எட்டரை மணியிலிருந்து ஒன்பது மணி வரை இப்பகுதி பரபரப்பு நிறைந்து காணப்பட்டது. (28)

# தாய்,சேய் சிகிச்சை மையம் இடம்மாறியமைக்கு கண்டனம்

(தென்மராட்சி)

கடந்த முப்பது ஆண்டுகளாய் கெற்பெலி பகுதியில் இயங்கி வந்த தாய், சேய் சிகிச்சை மையம் உசன் மற்றும் கச்சாய்ப் பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை கெற்பெலி ஊரக தேசிய எழுச்சிப் பேரவை கண்டித்துள்ளது. அதனால் இப்பகுதியில் உள்ள பெண்கள், கர்ப்பிணிகள் நான்கு கிலோ மீற்றர் நடந்து சென்று சிகிச்சை பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளதாக தெரியவருகிறது. மேற்படி பகுதியில் இயங்கி வந்த சிகிச்சை மையத்தை மீண்டும் அதே இடத்தில் இயங்க வைக்குமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (28)

## -ஆவரங்கால் பகுதியில்-

# காலாவதியான குடிநீர் கண்டுபிடித்து அழிப்பு

யாழ். கோப்பாய் ஆவரங்கால் பகுதியில் நேற்று முன்தினம் போத்தல்களில் அடைக்கப்பட்ட நீர் காலாவதியான நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் பரவி வரும் வயிற்றோட்டம் மற்றும் நெருப்புக்காய்ச்சலினால் ஏற்பட்டு வரும் அபாயநிலையைத் தடுப்பதற்காக கோப்பாய் பிரிவுக்குட்பட்ட சுகாதார உத்தியோகஸ்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனை நடவடிக்கையின் போதே மேற்படி காலாவதியான குடிநீர் போத்தல்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

# பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஆராய்வு

(மன்னார்)

மன்னார் நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை 10.00 மணியளவில் மன்னார் மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி நிலவரசி தலைமையில் மன்னார் மாவட்டத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சம்பந்தமான ஒரு கருத்தரங்கு இடம்பெற்றது. இதில் நூற்றிற்கும் மேற்பட்ட மகளிர் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் மன்னார் மாவட்ட மகளிர் மேம்பாட்டு அபிவிருத்தி ஒன்றியத்தின் பொறுப்பாளர் செல்வி கைமதியும் கலந்து கொண்டார். பின்னர் கிராமம் கிராமமாகச் சென்று கிராமத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை பற்றி ஆராய்வதற்காக நிகழ்ச்சி நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டது. (மி)

# வாகன சாரதிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த் காவல்துறை நடுவப்பணிமனையில் கருத்தரங்கு

## புகைப்படக் கண்காட்சியும் இடம்பெற்றது

(அலுவலக செய்தியாளர்)

வீதிவிபத்துக்கள் ஏற்படும்காரணங்களும், அதனைத் தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய விதிமுறைகள் குறித்தும், விதிமுறைகளை எவ்வாறு கைக்கொள்ள வேண்டும் என்பது பற்றியும் நேற்று தமிழீழ காவல்துறை



நடுவப்பணிமனையில் கண்ணிவெடி அகற்றும் பிரிவினைச் சேர்ந்த (மைக்) சாரதிகளுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கும் புகைப்படக்கண்காட்சியும் நடைபெற்றது.

தமிழீழ காவல்துறை நடுவப்பணியக கண்காணிப்பாளர் மாதவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், காவல்துறை குற்றத்தடுப்புப்பிரிவு கண்காணிப்பாளர் இயலரசன், வாகன போக்குவரத்துப்பிரிவு பரிசோதகர் கனகலிங்கம், பரிசோதக்ர் பவானி, வாகன போக்குவரத்துப்பிரிவு பொறுப்பாளர் சிவகுமாரன் ஆகியோர் கலந்துகொண்டு வீதிப் போக்குவரத்து குறித்து கருத்துரைகளை வழங்கினர்.

நடுவப்பணியக கண்காணிப்பாளர் மாதவன் தனது கருத்துரையில்,

தற்போது வன்னிப்பெருநிலப்பரப்பில் குறிப்பாக ஏ-9 நெடுஞ்சாலையில் இடம்பெற்ற வாகன விபத்துக்களினை ஆராய்ந்தபொழுது சாரதிகளின் கவலையீனமே அதிக



விபத்துக்கள் இடம்பெறக் காரணமாக அமைந்துள்ளமை தெரியவந்துள்ளது. எனவே சாரதிகள் அனைவரும் சாரதியக் கோட்பாட்டினைச் சரியான முறையில் கடைப்பித்து வாகனங்களை செலுத்தும் பட்சத்திலும், சாரதிகள் தமது பொறுப்பினை நன்குணர்ந்து செயற்படும் போதுமே விபத்துக்களைத் தடுக்க முடியும் எனவே இவற்றினை சாரதிகள் யாவரும் கைக்கொள்ள வேண்டியது அவசியம் எனத்தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் மைக் நிறுவன பிரதிப்பணிப்பாளர் மற்றும் நிறுவனச் சாரதிகள் கலந்து கொண்டனர்.

(சோ,கு)

இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிச் செல்கையில் பிரித்தானியா அதனைப் பலவித பிரச்சினைகளுடன் விட்டுச்சென்றுவிட்டதாகவும் அதற்காக அதனிடம் நட்டஈடு கோரப்போவதாகவும் பொதுசன ஐக்கிய முன்னணிச் செயலாளரும் மலைநாட்டு அபிவிருத்தி அமைச்சருமான தி.மு.ஜெயரட்ண கூறியிருக்கிறார்.

* நாட்டின் வளத்தைச் சுரண்டிச்சென்று தமது நாட்டை வளப்படுத்தினார்களே தவிர இலங்கையை உரியமுறையில் அபிவிருத்தி செய்யவில்லை.

* நாட்டின் கலாசாரத்தை அழித்துவிட்டனர்.

* இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட தமிழர்களுக்குரிய வாழ்க்கையைப் பெற்றுக்கொடுக்கவில்லை.

* இனப்பிரச்சினையை உரியவகையில் கையாளவில்லை. இதனால் நாடு பாதாளத்தை நோக்கிச்சென்று கொண்டிருக்கிறது. என்றெல்லாம் அவர் குற்றச்சாட்டுக்களை அடுக்கியுள்ளார்.

# இன்றைய மோசமான சூழலுக்கு பிரிட்டிஷார் மீது பழிபோடும் அரசு

சனாதிபதி சந்திரிகாவைப் போன்றே அவரது சகாக்களுக்கும் இப்படி அடிக்கடி அபூர்வமான கருத்துக்கள் தோன்றுவதுண்டு. இந்தக் கருத்துக்கள் எல்லாம் தம்மை நியாயப்படுத்துவதற்காக மற்றையோர் மீது பழிபோடும் வகையிலானதாக அமையுமே தவிர யதார்த்த நிலையைப் புரிந்துகொண்டு சிக்கல்களைச் சீர்செய்யக்கூடியனவாக அமைவதில்லை. இலங்கையில் தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் உண்டு என்று புரிந்துகொண்ட முதலாவது சிங்களத்தலைவர் சந்திரிகா குமாரதுங்கவே என்று அவரது சகாக்கள் அடிக்கடி தம்பட்டம் அடிப்பார்கள். சந்திரிகாவும் கூட. 1994இல் அவர் மேற்கொண்ட சமாதான நடவடிக்கைகள் பற்றி கூறிக்கொள்வார். இவையெல்லாம் அவரது தந்தை எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க, தாய் சிறிமாவோ பண்டாரநாயக்க உட்பட டி.எஸ். சேனநாயக்க முதல் டிங்கிரிபண்டவிஜயதுங்க வரையிலான அனைவர் மீதும் குற்றம் சுமத்தும் அல்லது அவர்கள் மீது பழிபோடும் வகையிலானது மட்டுமேயாகும். ஆனால் அதில் மாற்றத்தைக் கொண்டுவரும் வகையில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஏதாவது செய்துள்ளாரா? என்றால், அதனை மேலும் மோசமாக்கி தமிழ் மக்களுக்கு என்றுமில்லாத துன்பத்தை விளைவித்ததே அவரின் சாதனையாகவுள்ளது.

இன்று அவர் ஆட்சியில் இருந்துகொண்டு சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய கட்டாய நிலையிலிருப்பினும் அதற்கு முடியாமலிருப்பதற்கு அவர் 7 வருடங்களுக்கு மேலாக நடத்திய இனவாத யுத்தம் வளர்த்துவிட்ட சக்திகளே காரணமாக இருக்கின்றன. அவர் ஆட்சிபீடம் ஏறி 10 வருடங்களில் செய்துவிட்ட மிகப் பெரிய சாதனை நாட்டைப் பொருளாதார ரீதியில் படுகுழிக்குள் தள்ளியதேயாகும். இதற்கு அவர் நடத்திய யுத்தமே காரணமாக அமைந்தது எனின் பக்கவிளைவாக ஏற்பட்டதே ஜே.வி.பி.யினதும் சிகல உறுமயவினதும் அதிதீவிர வளர்ச்சியாகும்.

பிரித்தானியர்கள் இலங்கையை ஆக்கிரமித்ததும், வளங்களைச் சுரண்டியதும், இரு ஆட்சிகளாக இருந்த பிரதேசங்களை ஒரே நாடாக்கிச் சிக்கல்களை உருவாக்கிவிட்டதும் உண்மையாக இருக்கலாம். இவ்வாறான சிக்கல்கள் உருவாகாவிட்டால் இலங்கை இன்றைய நிலைக்குத் தள்ளப்படாமலும் இருந்திருக்கலாம். ஆனால் அவர்கள் இலங்கையை விட்டு வெளியேறி 55 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் இவற்றைச் சீர்செய்ய ஆட்சியதிகாரத்தைப் பொறுப்பேற்ற சிங்கள அதிகார வர்க்கம் செய்தது என்ன?

பிரிட்டிசார் இலங்கையை அபிவிருத்தி செய்யவில்லை, நாட்டைச் சுரண்டினார்கள் என்றால் கடந்த 55 வருடங்களில் சிங்கள அதிகாரவர்க்கம் செய்தது என்ன? இன்றும் ஒருவர் மீது ஒருவர் இலஞ்சக்குற்றச்சாட்டும், ஊழல், முறைகேட்டுக் குற்றச்சாட்டும் சுமத்துவதே இவர்களின் வேலையாக இருக்கிறது. இதனைத்தவிர்க்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஆளும் கட்சியினர் மீது எடுக்காவிட்டாலும் கூட தமது அரசியல் விரோதிகளான எதிர்க்கட்சியினர் மீது குற்றச்சாட்டைச் சுமத்துவார்களே தவிர வேறு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா? எவ்வளவோ வளங்களைச் சுரண்டிச் செல்வதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும் கூட யார் மீதும் நடவடிக்கை எடுக்கப்படாமை எதனைக் காட்டுகிறது?

இன்று பொருளாதாரநிலை வீழ்ச்சியிலிருந்து மீள இவர்கள் செய்வதானது மீண்டும் பழைய நிலைக்கு இவர்கள் செல்வதையே காட்டுகிறது.

நாட்டின் கலாசாரத்தை அழித்துவிட்டார்கள் எனக்குற்றம் சாட்டும் இவர்கள் அதனைச் சீர்செய்ய என்ன செய்தார்கள்? ஏனைய மக்களின் கலாசாரத்தை விட்டாலும் சிங்கள பௌத்த கலாச்சாரத்தைப் பாதுகாக்கவாவது இவர்களால் முடிந்ததா? இப்பொழுது அரசியலில் ஈடுபட்ட குற்றத்திற்காக பௌத்தமதத்தவர்களால் மதிக்கப்படும் பிக்குகள் தாக்கப்படுகின்றனர். அவர்கள் மீது அவதூறுப் பிரச்சாரங்களை அரச ஊடகங்களே மேற்கொள்கின்றன. பௌத்த சிங்கள கலாசாரத்தைப் பாதுகாக்கும் இவர்களைத் தமது ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைக்கப் பயன்படுத்தியமை காரணமாக இன்று அவர்களும் மதிப்பிழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறாக இருக்கையில் கலாசாரத்தைப் பாதுகாப்பது எப்படி? இலங்கையைவிட்டு பிரிட்டிசார் வெளியேறியதும் சிறிலங்காவின் ஆளும் வர்க்கம் செய்த முதல் வேலை நாட்டின் முக்கிய ஏற்றுமதித் துறையாகிய பெருந்தோட்டத் தொழிற்றுறையின் தொழிலாளர்களின் குடியுரிமையைப் பறித்ததாகும். அன்று தொட்டு அவர்கள் அடிமைகளாகவே நடத்தப்பட்டனர். இப்பொழுது அவர்கள் வாக்குரிமை பெற்றவர்களாகவும், சக்தி வாய்ந்தவர்களாகவும். இருக்கின்றமையினால் அவர்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.

**வேலவன்**

இன்று இந்த மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களுட்பட அனைவரும் பெரும் பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர். பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க விண்ணப்பம் கோருகையில் 35.000 இற்கு மேற்பட்டோர் வேலையற்றவர்கள் என விண்ணப்பித்திருக்கின்றனர். அரச துறையில் தொழில் புரிவோர் போதிய ஊதியம் வழங்கப்படவில்லை எனப் போர்க் கொடி தூக்கியுள்ளனர்.

இவற்றிற்குக் காரணம் கடந்த காலத்தில் நடைபெற்ற பாரிய யுத்தம் என உணரப்பட்டு அதை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்ற முடிவுக்கு மக்கள் வந்தனர். ஆனால் இதனைச் சீரான முறையில் நடைமுறைப்படுத்த அதிகாரப் போட்டி இடம் தருவதாக இல்லை. இந்த அதிகாரப் போட்டியும் சுயநல அரசியலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் பெரும் முட்டுக்கட்டையாக இருப்பது இன்று உணரப்பட்டிருக்கின்றது. இன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சிறிய கட்சியான ஜே.வி.பியும் இணைந்து ஆட்சியமைத்துள்ள போதிலும், அதிகாரம் ஜே.வி.பியின் கையிலேயே உள்ளது என்பது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் உணரப்பட்டிருக்கிறது. அல்லது ஜே.வி.பி. மூலம் உணர்த்தப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷார் விட்டுச் சென்ற இனப்பிரச்சினை கடந்த 55 வருடங்களுக்கும் மேலாக மேலும் வளர்க்கப்பட்டு இரு இனங்களுக்கும் இடையே முரண்பாடுகளும், அவநம்பிக்கைகளும் அதிகரித்துள்ளன. இதனை பிரிட்டிஷார் வளர்த்து விடவில்லை. மாறாக இனவாத ஆட்சியாளர்களாலேயே இது வளர்த்தெடுக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷார் இனப்பிரச்சினையைத் தோற்றுவித்திருந்தால் கூட கடந்த 55 ஆண்டுகளில் அதனைச் சீர் செய்திருக்க முடியுமாயினும் இனவாத ஆட்சியாளர்கள் அவ்வாறு செய்யவில்லை.

இவ்வாறிருக்க பிரிட்டிஷார் மீது குற்றம் சுமத்துவதும், அவர்கள் மீது பழிபோட்டு தாம் தப்பித்துக்கொள்ளப் பார்ப்பதும் அவர்களின் ஏமாற்று வேலைகளில் ஒன்றாகும். இவ்வளவு தூரம் இனப்பிரச்சினை கூர்மையடைந்து பாரிய ஒரு யுத்தத்தைச் சந்தித்து நாடு பெருநெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டுள்ள போதிலும் அதிலிருந்து விலகிச் செல்ல யாதார்த்த பூர்வமான நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடவில்லை. மாறாக மேலும் மேலும் பிரச்சினைகளை வளர்த்து மோசமான நிலையொன்றுக்கே இவர்கள் இட்டுச் செல்கின்றனர். இவ்வாறான நடவடிக்கை தொடருமாயின் எதிர்காலத்தில் இவர்கள் மீது வழக்குத் தொடரும் அல்லது பழிபோடும் சூழ்நிலையே ஏற்படும்.

## குடும்ப பொருளாதாரத்தை ஈட்ட பெண்களுக்குப் பயற்சிநெறி

(புதுக்குடியிருப்பு)

வடக்கு கிழக்கு கல்வி பண்பாட்டு அமைச்சின் இளைஞர் அபிவிருத்திப் பிரிவின் நிதி அனுசரணையுடன் முல்லை மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் வள்ளிபுனம் பிரதேசத்தில் 40 யுவதிகளுக்கான 03மாதகால பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு வள்ளிபுனம் கனிஸ்ர உயர்தர வித்தியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பி.பகல்3.30 மணிக்கு முல்லை மாவட்ட பதிர் இளைஞர் சேவை அலுவலகத்தில் சண்முக வடிவேல் தலைமையில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் முல்லை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.கனகரத்தினம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டதுடன் வடமாகாண தேசிய இளைஞர் சேவை மன்றப்பணிப்பாளர் எஸ்.பேரானந்தம் கலந்து கொண்டு பொதுச் சுடரை ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியினை முல்லை மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் செல்வி-வேழினி ஏற்றிவைத்தார். முல்லை மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன், வள்ளிபுனம் போரெழுச்சிக் குழு செயலாளர், வள்ளிபுனம் பாடசாலை அதிபர் மற்றும் பயற்சி ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (08)

## காட்டு யானைகள் தொல்லை அதிகரிப்பு

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் கல்லம்பத்தைப் பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த இப் பகுதி மக்கள் அங்கு மீளக்குடியமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த வெற்றிவேல்(வயது 42) ஜெயபாரதி(வயது 33) ஆகியோர் அண்மையில் யானை தாக்கியதால் படுகாயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## துயிலுமில்லத்தில் சிரமதானம்

(மல்லாவி)

துணுக்காய் வலய மாணவர் அமைப்பின் ஒருங்கிணைப்பில் ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மேஜர் முரளி கணினிப் பயிற்சி நிலைய ஆசிரியர்கள், மாணவர்கள் கடந்த சனியன்று சிரமதானப்பணிகளை மேற்கொண்டனர். (24)

## தோப்பூரில் வெளிச்ச வீடு

(திருமலை)

தோப்பூர் மீனவர்களின் நலன்கருதி பட்டியடியில் 35 இலட்சம் ரூபா செலவில் வெளிச்ச வீடு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

தோப்பூர் பிரதேச ஒன்றியத்தின் தலைவர் எம்.ஏ.ஜீ.எம். சாபீர் தலைமையிலான பிரமுகர்கள்குழு கிழக்குமாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ்வை அவரது காரியாலயத்தில் வைத்து சந்தித்துப் பேசினர். இச்சந்திப்பின்போது தோப்பூர் பிரதேசத்தின் அபிவிருத்திப்பணிகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

## பொது நோக்கு மண்டபங்கள் அமைப்பு

(முள்ளியவளை)

நியாப்திட்ட நிதியுதவியுடன் நெடுங்கேணி நொச்சிக்குளம் கிராம அபிவிருத்தி சங்கத்தினரால் அப்பகுதியில் பொதுநோக்கு மண்டபம் அமைக்கப்பட்டுவருவதாக மேற்படி சங்கத் தலைவர் த.கனகரத்தினம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், நெடுங்கேணி பிரதேசத்தில் பட்டறை பிரிந்தகுளம் பகுதியிலும், கற்குளம் பகுதியிலும் மேற்படி நிறுவன நிதியுதவியுடன் அவ்வப்பகுதி கிராம அபிவிருத்தி சங்கங்களினால் பொது நோக்கு மண்டபம் அமைக்கப்பட்டு வருகிறதெனவும், இம்மண்டபவேலைகள் இம்மாத முடிவுக்குள் முடிவடையும் எனவும் தெரிவித்தார். (ஆ)

## தீர்த்தோற்சவம்

(அலுவலக செய்தியாளர்)

வட்டக்கச்சி மாயவனூர் திருக்குழல் நன்மாதுமை சமேத கணபதீஸ்வரர் சிவன் திருக்கோவிலில் வருடாந்த ஆடி அமாவாசைத் தீர்த்தோற்சவ வைபவம் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 15ஆம் திகதியன்று மேற்படி ஆலயத்தில் மோட்ஷ அர்ச்சனைகள் இடம்பெற வுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (சோ.கு)

## வருடாந்த அலங்கார உற்சவம்

கிளிநொச்சி நகரின் மேற்குப்புறமாக அமைந்துள்ள செல்வாநகர் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாட்கள் சிறப்புற நடைபெற ஏற்பாடாகியுள்ளது. 9ஆம் நாளான 27.08.2004 அன்று அம்பாள் கிராம ஊர்வலமாக புதுமுறிப்பு கண்ணன் ஆலயம் சென்று சேவியர்கடைச் சந்தியையடைந்து மீள ஆலயம் வந்தடைவாள். 10ஆம் நாள் (28ஆம் திகதி) காலை 7.00மணிக்கு தீ மிதிப்பு நடைபெற்று, பின்னர் கந்தன் குளத்தில் தீர்த்தமாடி நண்பகல் மகேசுர பூசை, (அன்னதானம்) நடைபெறும் 1995ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதலாவது உற்சவம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.



உலகஉணவுத்திட்டத்தின் கீழ் செம்மலைக் கிராமத்தில் 2ஆம் குறுக்குத்தெரு மக்களின் பங்களிப்புடன் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. கிராமத்தின் அனைத்து மக்களும் திரண்டு தமக்கான புதிய வீதியை செப்பனிட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (படம்-சகிலா)

# சமூகப்பணி தொடர்பான ஈராண்டு டிப்ளோமா பாடநெறி

கொழும்பிலுள்ள தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனமானது (NISD), சமூகப்பணி தொடர்பான ஈராண்டு டிப்ளோமா பாடநெறிக்கு (2004/2006 பிரிவு) மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இச்சமூகப் பணி பற்றியும், இப்பாடநெறி பற்றியும் எம்மிடையே போதியளவு விளக்கமின்மை காணப்படுகிறது. இதனை நிவர்த்திக்கும் நோக்கில் அமைந்ததே இச்சிறு கட்டுரையாகும்.

**“விஞ்ஞான பூர்வமான அறிவையும், அனுபவத்தினையும் பயன்படுத்தி தனிநபர்களினதும், குழுக்களினதும், சமுதாயத்தினதும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பல்வேறு வளங்களைப் பெற்றுக் கொடுக்கும் கலையினை சமூகப்பணி எனலாம்.”** உலகில் பிரச்சினைகள் இல்லாதவர்கள் எவருமில்லை எனலாம். மனிதர்களில் பெரும்பாலானோர் தமது பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து, தாமே தமது பிரச்சினைக்கான தீர்வினைக் காணஇயலாதவர்களாகவே காணப்படுகின்றனர். இப்படிப்பட்டவர்களுக்கே சமூகப்பணியாளர் ஒருவரின் சேவை தேவைப்படுகின்றது. வீதியோரச் சிறுவர்கள், பெற்றோரை இழந்த சிறுவர்கள், மது, போதை வஸ்துக்கு அடிமையானோர், அங்கவீனர், மனநிலை பாதிப்புக்குள்ளானோர், விபச்சாரத்தில் ஈடுபடுவோர், இடம் பெயர்ந்தோர், சிறுவர் தொழிலாளர்கள் போன்றோருக்குப் பிரச்சினைகள் அதிகம் காணப்படுகின்றன. இவ்வாறானவர்களுக்கும் அவர்களினது குடும்பத்தினருக்கும் சமூகப்பணியானது மிக அவசியமானதாகும். சமூகப்பணியில் பிரச்சினைக்கு உட்பட்டவரே தமது பிரச்சினைக்கான தீர்வைக் கண்டுபிடிக்க ஊக்கமளிக்கப்படுவது சிறப்பம்சமாகும்.

சமூகப்பணி என்ற சொல்லை மேலும் உதாரணங்கள் மூலம் விளக்குவோமாயின்: யாதேனும் ஒரு காரணத்திற்காக ஒருவருக்கு மீன் தொடர்ச்சியாகத் தேவைப்படின் அவருக்கு மீனைப் பெற்றுக் கொடுப்பதோ, அல்லது மீன் பிடிக்க உபகரணங்கள் வழங்குவதோ சமூகப்பணி ஆகாது. மாறாக அவரிடம் காணப்படுகின்ற வளங்களையும், சூழலில் காணப்படுகின்ற வளங்களையும் ஆராய்ந்து, அந்நபருக்குத்தாமாக மீன்பிடிக்கும் வழிவகைகளைத் தூண்டுதலே அதாவது மீன் பிடிக்க கற்றுக்கொடுத்தலே சமூகப் பணியாகக் கருதப்படும். மேலும் ஒரு உதாரணத்தை பார்போமாயின் அங்கவீனர் ஒருவருக்கு எடுத்த எடுப்பிலேயே முச்சக்கரவண்டியைப் பெற்றுக்கொடுத்தல் சமூகப்பணி ஆகாது. மாறாக அவரது பிரச்சினைகள், அவரது திறன்கள், அவரது சூழல் என்பவற்றுக்கேற்ப, அவருக்கு முதன்மையானதும் நீண்ட கால நன்மையளிக்கக் கூடியதுமான ஒன்றைப்பெற ஊக்குவித்தலே சமூகப்பணியாகக் கருதப்படும். அது முச்சக்கரவண்டியாகவோ அல்லது தொழிற்பயிற்சியாகவோ அல்லது வேறு என்னவாகவோ இருக்கமுடியும்

மேற்கூறிய உதாரணங்களிலிருந்து சமூகப்பணி என்ற பதத்தின் பொருளை நாம் ஓரளவு புரிந்து கொள்ள இயலும். சில கோட்பாடுகளுக்கமையவும், ஒழுக்கக்கோவைகளுக்கமையவும் செய்யப்படும் சமூகப்பணியானது உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முதன்மையான சேவையாகும். இலங்கையில் இது பற்றிய பயிற்சியினை வழங்கும் ஒரேயொரு நிறுவனமாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் விளங்குகின்றது. இரு வருட முழுநேர இக்கற்கை நெறிக்கு க.பொ.த.(உயர்தரம்) சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதித் தேவையினைப் பூர்த்தி செய்தவர்கள் விண்ணப்பிக்கலாம். அல்லது மூன்று வருட சேவையினை பூர்த்தி செய்த ஆசிரியர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி அதிகாரிகள், கிராம சேவகர்கள், சமூக சேவை அதிகாரிகள், சிறுவர் நன்நடத்தை பராமரிப்பு அலுவலர்கள், கூட்டுறவு அபிவிருத்திப் பரிசோதகர்கள், மாவட்ட இளைஞர் சேவையாளர்கள் போன்றோர் விண்ணப்பிக்க முடியும் அரச சார்பற்ற நிறுவனங்களில் மேற்படி பதவிகளுக்கு சமனான பதவியினை வகிப்பவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

இப்பாட நெறியினூடாக கிடைக்கும் தகைமை அங்கீகரிக்கப்பட்டதும், உலக நாடுகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமாகும். பல்வேறுபட்ட பிரச்சினைகளுடன் வாழும் எம்மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் அவர்களின் மேம்பாட்டிற்கும், சமூக விடுதலைக்கும் எம்மிடையே பல சமூகப்பணியாளர்கள் உருவாக்கப்படுதல் மிக அவசியமானதாகும். விண்ணப்ப முடிவுத் திகதி 31-08-2004 ஆகும்.

**குறிப்பு:-**

**இப்பயிற்சி நெறி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 30-07-2004 வர்த்தமானி அறிவித்தலை பார்வையிடவும். வர்த்தமானி அறிவித்தல் பிரதியும், மாதிரி விண்ணப்பப் பிரதியும் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.**

**ஆக்கம்:-**
**பெ.கணேசமூர்த்தி.**
**(பொதுச் சுகாதார பரிசோதகர்,**
**உளநல சமூகப்பணியாளர்,**
**சமூகப்பணி டிப்ளோமா மாணவன்)**

# பாடசாலை ரீதியிலான சிறந்த பெறுபேறுகள்

**வெளியான க.பொத. உயர்தரப் பரீட்சையில் கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகள் சிலவற்றின் மாணவர்கள் பெற்ற சிறந்த பெறுபேறுகள் வருமாறு.**

**கிளி.இராமநாதபுரம் ம.வி**
வர்த்தகப்பிரிவு
இ.யானன் 3பி; ம.மஜீவன் 2ஏ,சி; அ.வசீகரன் எ,2சி; சி. சர்மிலா பி,சி,எஸ்; ப.சுதர்சனா சி, 2எஸ்; இ.மைதிரேயி பி,சி,எஸ் ;ப. நித்தியாயினி 3சி,ஜ ;லோகராணி பி,2சி.
கலைப்பிரிவு
க.சந்திரேகா ஏ,பி,சி; இ.ரதீபா 2ஏ,பி; கோ.கல்பனா ஏ,2சி; வி. கீதாஞ்சலி ஏ,பி.சி,சு.கவிதா ஏ,பி,சி; பொ.குணசாந்தினி ஏ,சி,எஸ்;சி. நிலோஜினி ஏ.2சி; மு.விநோதினி 3சி.

**பளை மத்தியகல்லூரி**
உயிரியல் பிரிவு
பா. சிவசோதி 2சி,எஸ்; கு.கலைதீபன் பி,2சி; க.கண்ணதாசன் 2சி,எஸ்.
கணிதப்பிரிவு
ப. ஸ்ராவின் 3சி; வ. அரவிந்தன் 3 சி; சு.சஞ்சீவன் பி,2சி.
கலைப் பிரிவு
பா.பாலதர்சினி 3பி; யோ. இந்துாரி ஏ,பி,எஸ்;அ.பிரேமினி ஏ,பி.சி.
வர்த்தகப்பிரிவு
இ.சோபிகா ஏ,2பி,

**பூநகரி நல்லூர் அ.த.க. பாடசாலை**
கலைப்பிரிவு
ப.சுதர்சன் எ,பி,சி; கு.யசிந்தன் ஏ,பி,சி; பொ.பிரகலாதன்,ஏ,2சி;த. துசியந்தன் ஏ,பி,சி; து.ஜெயக்குமார் ஏ,சி,எஸ்.

**திருவையாறுஅ.த.க. பாடசாலை**
கலைப்பிரிவு
செ. குமுதா ஏ,பி,எஸ்; ப.யசோதினி ஏ,2சி; நி. விநோதினி ஏ,2சி.

**பிரமந்தனாறு ம.வி**
கலைப்பிரிவு
ராதிகா ஏ,பி,சி

**வேரவில் இந்து ம.வி**
கலைப்பிரிவு
க.சதீஸ்வரன் 3பி.

**உருத்திரபுரம் ம.வி**
கலைப்பிரிவு
வே.பிரபாகரன் ஏ,2பி;தி.றஜிதா 3பி; பே. சாமினி 3சி; க.விமலேஸ்வரி 2ஏ,சி.
வர்த்தகப்பிரிவு
பு.கம்சாகரன் ஏ.பி,சி; இ.வித்யா எ,பி.சி.

**கிளிநொச்சி ம.வி**
வர்த்தகப்பிரிவு
க. சிவகுமார் ஏ,பி,சி; இ.உமாரேகா ஏ,பி,சி.
கலைப்பிரிவு
ஆ.லோகப்பிரியா 3பி;கி. மேரி 2ஏ,பி; ச.சகிலா ஏ,பி,சி; இ.சிந்துஜா ஏ,பி,சி; த. குல கோதை ஏ,பி.சி; சு.ஜெயசந்திகா ஏ,பி,சி.

**கிளி.கனகபுரம்.ம.வி**
வர்த்தகப்பிரிவு
க. பிரியதர்சினி 2ஏ,பி.

**கறுக்காய்தீவு அ.த.க.பாடசாலை**
கலைப்பிரிவு
நா.குணசீலன் ஏ,2சி;க. பாலேஸ்வரன் ஏ,2சி; மு.கோகுலராணி 2பி,சி.

**கண்டாவளை ம.வி**
கலைப்பிரிவு
கா.சுதாகரன் ஏ,2பி; கா.குமுனரஞ்சினி 2பி,சி; சி.சுரேந்தினி ஏ,பி,சி; க. தீபா ஏ,2சி.

**முருகானந்தா.ம.வி**
கலைப்பிரிவு
சி.சிந்துஜா ஏ,பி,சி,
வர்த்தகப்பிரிவு
சு.பாஸ்கரன் 3ஏ; யோ.றெஜினோல்ட் ஏ,பி,சி; கு.சுவேந்திரகுமார் 3ஏ.

**அக்கராயன் ம.வி**
கலைப்பிரிவு
சு.சுகநீதலன் ஏ,2பி; க.சசிக்குமார் 3சி; நி.சிறீதரன் 2பி,சி; சி.துசியந்தினி ஏ,2பி.
வர்த்தகப்பிரிவு
இ.கமல்ராஜ் 3ஏ, சு.சுபாகஜன் 2ஏ,பி; ச.மலர்விழி ஏ,2பி.

**முழங்காவில் ம.வி**
வர்த்தகப்பிரிவு
க. அன்ரனிவிமல்தாஸ் 2ஏ,பி; நா. விஜிதரன் 3ஏ ;ந.சுகந்தினி 3ஏ; சி.லாவகலா 3பி.

**பூநகரி ம.வி**
கலைப்பிரிவு
ச.மயூரன் 3பி;ச.சிவதிலகன் 2ஏ,பி,
வர்த்தகப்பிரிவு
பா. கருணாந்தினி 3ஏ, சி. அனுஜா 2ஏ,பி.

**கிளி.இந்துக்கல்லூரி**
கணிதப்பிரிவு .
கு.மயூரன் 3சி; இ.சஞ்சயன் பி,2சி.
உயிரியல்பிரிவு
அ.காயத்திரி 2சி,எஸ்.
வர்த்தகப்பிரிவு
க.சிவதர்சினி 2ஏ,சி; ம.இதயரூபி ஏ,2பி; க.பிரியதர்சினி ஏ.2பி;யே.விமல்ராஜ் ஏ,12,பி.
கலைப்பிரிவு
வி.விஜயதர்சினி ஏ,பி,எஸ்; யே.பிரகாஸ் 2ஏ,பி.

**உடையார்கட்டு ம.வி.**
கலைப்பிரிவு
சோ.சோபிகா 3பி; சி.மாதுமை 3பி; க.முருகானந்தன் ஏ,பி,சி; சி.இரவீந்திரன் 2ஏ,பி; தி.சுதர்சினி 2பி,சி; எ,மேரி ஏ,பி,எஸ்; இ.இராசகுமார்ஏ.2சி.
வர்த்தகப் பிரிவு
ப.கஜமுகன் ஏ,பி.சி; கு.குணசீலன் 2ஏ.எஸ்; தி.சுகந்தினி ஏ,சி,எஸ்; க.சரஸ்வதிதேவி ஏ,2சி.

**குமுழமுனை ம.வி.**
கலைப்பிரிவு
சி.இரவிநேசன் 2ஏ,சி,

**முத்தையன்கட்டு வலதுகரை அ.த.க.பாடசாலை**
கலைப்பிரிவு
க.கஜானரதி ஏ,2பி; செ.வினோதா 2ஏ,சி; வ.தேவகுலரூபி 3பி.,

**பாரதி வித்தியாலயம் விசுவமடு**
கலைப்பிரிவு
சி.இளங்கேஸ்வரன் ஏ,2பி; இ.சசிகரன் ஏ,பி,சி; க.சந்திரகலா 3பி;ந.பிரேமலா 2பி,சி.

**ஒட்டுசுட்டான் ம.வி.**
க்லைப்பிரிவு
இ.நிசாந்தினி 3பி; பு.நிசாந்தன் 2பி,சி; ப.கலைவாணி ஏ,2பி; தி.தாரணி 2பி,சி.
வர்த்தகப் பிரிவு
த.சிவாகர் 2பி,சி.

**இரணைப்பாலைறோ.க வித்தியாலயம்**
கலைப்பிரிவு
அ.அருள்மாரி எ,சி,எஸ்

**மு/வித்தியானந்தாக்கல்லூரி**
கணிதப் பிரிவு
ச.மாயவன் பி,சி,எஸ்.
உயிரியல்பிரிவு
சி.கங்கையானன்2ஏ,பி; இ.ஜெயந்தன் 3பி; சி.தயாபரன் பி,சி,எஸ்; செ.டீமரீன் 3சி; ச.நிசாந்தினி3சி; பொ.சதாயகுமாரி 3சி,
வர்த்தகப்பிரிவு
கா.தீபகரன் ஏ,பி,சி; க.உதயலதா ஏ,2பி;ஜெ.நிரஞ்சனா 3பி;செ.ஜீவிதா 3ஏ.க.தயாபரன் ஏ,பி,சி; க.வசந்தி 2ஏ,பி; ச.விஜிதா ஏ,2பி; இ.விஜிந் திரன் 2ஏ,பி; சீ.சுபாஸ்கரன் 2ஏ,பி; சி.தட்சாயினி 2ஏ,சி; த.தட்சானந்தி ஏ,பி,சி,
கலைப்பிரிவு
செ.ரமேஸ்குமார் 3பி; ஜெ.சரன்யா ஏ,2பி; ம.சுபத்திரா ஏ,பி,சி; க.மீரா 2பி,சி; கு.கோமதி ஏ,2பி; அ.ரேகா ஏ,பி,சி; சு.சதீஸ்வரன் 2ஏ,பி; தி.கேசவன் 2ஏ,பி; ம.சுதாசினி 3பி; த.மேரிதர்சினி ஏ,2பி; க.ஜமுனா ஏ,2பி.

**விசுவமடு ம.வி.**
உயிரியல் பிரிவு
ச.வசீகரன் பி,2சி.
வர்த்தகப்பிரிவு
ச.காண்டீபன் 3பி; இ.பாலகிருஸ்ணன் ஏ,பி,சி; நா.தயாநிதி ஏ,2சி; தி.றஜிதா 3பி, கு.நடேசன் ஏ,பி,சி; ப.கிரு சாந்தன் ஏ,2பி; ச.ராதிகா 2ஏ,பி; ச.தர்சனா ஏ,பி,சி.

**முல்லைத்தீவு ம.வி.**
கலைப்பிரிவு
கீ.விதிநியாகரன் ஏ,சி,எஸ; பே.மேரியசிந்தா 2ஏ,பி; சூ.இரட்னாதேவி 2ஏ,எஸ்.
வர்த்தகம்
பெ.யூடிகுமார் 3ஏ.

**மல்லாவி மத்திய கல்லூரி**
கணிதப்பிரிவு
ச.ஸ்ரெயிலாதரன் ஏ,பி,சி; இ.கௌரீகரன் 3சி; ந.முகுந்தன் 3சி; மோ.மஜீபன் பி,2சி; ந.தமயந்தி 2சி,எஸ்.
கலைப்பிரிவு
கு.புஸ்பாகரன் 2ஏ,சி; தி.கயேந்தினி ஏ,பி,சி, சி.யசோதா ஏ,பி,சி; இ.லதாங்கினி ஏ,2சி;
வர்த்தகப்பிரிவு
நா.தயாபரன் ஏ,2பி; இ.சைலஜாங்கினி ஏ,2பி.
உயிரியல்பிரிவு
இ.சுகிராத் சி,2எஸ், வ.பவித்திரா 2சி,எஸ், பா.வாசகன் 2பி,சி; ந.லயந்தினி 3சி.

**கிளி.சென்திரேசா மகளிர் கல்லூரி**
கலைப்பிரிவு
நி.நவகீதா பி,2சி; செ.செல்வநிதி ஏ,2சி.

**மு:.வவுனிக்குளம் ம.வி.**
வர்த்தகப் பிரிவு
வினோதா 2பி,சி,
கலைப்பிரிவு
தி.கஜேந்திரகுமார் ஏ,2சி.

**மு/யோகபுரம் ம.வி.**
கலைப்பிரிவு
இ.ரவிச்செல்வன் 2ஏ,சி; பா.விஜயவர்த்தனி 2ஏ,சி,

**மாங்குளம் ம.வி.**
வர்த்தகப்பிரிவு
க.சுரேஸ்குமார் ஏ,பி,சி; இ.பிரியாந்தி ஏ,பி,சி.

**வற்றாப்பளை ம.வி**
வர்த்தகப்பிரிவு
அ.அனுசியா 3ஏ; ம.கஜீபனா 2ஏ,பி,
கலைப்பிரிவு
க.மைதிலி ஏ,பி.சி; க.அனுஷா ஏ,பி.சி; சி.கவிதா ஏ,2சி;

**முல்/பாண்டியன்குளம் ம.வி**
கலைப்பிரிவு
வே.ரேணுகா 2பி,சி. (சோ,கு)

# உலகவங்கியின் 800 மில்.டொலர் கடனுதவியை சிறில.அரசாங்கம் இழக்கும் அபாயம் அதிகரிப்பு

## -ஐ.தே.க.வின் பொருளியல் துறைப் பேச்சாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

**உலக வங்கியின் எண்ணூறு மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை ஆளும் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இழந்து கொண்டுவருவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பொருளியல் துறை பிரதம்பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாடொன்றில் உரையாற்றிய அமைச்சர் மேலும், அரசாங்கத்தின் பொருளாதாரப் பற்றாக்குறைக்கென உலக வங்கி மேற்படி தொகை நிதியை அனுமதித்துள்ளது. மூன்று வருட கடன் அடிப்படையிலான இந்த நிதி தற்போது இழக்கப்படும் அபாயத்தில் உள்ளது என்றும், அண்மையில் சனாதிபதியால் வெளியிடப்பட்ட கொள்கைப் பிரகடனம் சர்வ தேச நிதி நிறுவனங்களால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததாக உள்ளது என்றும் கூறினார்.

திறைசேரியின் செயலாளர் உலகவங்கியுடன் பல ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளார். சர்வதேச நிதியுதவி தொடரப்படுமாயின் ரூபாவின் மதிப்பு மேலும் குறைவடைவதுடன் ஏற்கனவே ஆட்டம் கண்டுள்ள பொருளாதாரம் பாதகமான பல விளைவுகளை எதிர்கொள்ளும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

# குழு மோதலைத் தொடர்ந்து கைக்குண்டுடன் நபர் கைது

(கொழும்பு)

கைக்குண்டு வைத்திருந்த நபர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வத்தள எலகந்தயில் சென்ற திங்கள் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இப்பகுதியில் இரண்டு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து விசாரணைக்காக அங்கு சென்ற பொலிசார் குறித்த நபரின் வீட்டைச் சோதனையிட்ட போது இக் கைக்குண்டை கண்டு பிடித்துள்ளனர்.

கழிவு வாய்க்கால் ஒன்றில் இருந்தே தான் இக்கைக்குண்டைக் கண்டெடுத்ததாக அந்நபர் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

# கடும் வரட்சியால் 7மாவட்டங்களில் 450,000 குடும்பங்கள் பாதிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் ஏழுமாவட்டங்களில் நிலவிவரும் கடும்வரட்சி சுமார் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் குடும்பங்களை பாதித்துள்ளது.

பிரதான நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் வெகுவாக குறைவடைந்துள்ளதால் குடிநீருக்காக மக்கள் பலமைல்கள் அலைந்து திரிய வேண்டியநிலை இப்பிரதேசங்களில் ஏற்பட்டுள்ளது. அத்துடன் நெல் உற்பத்தியும் வெகுவாகக் குறைந்துள்ளதாக உணவு விவசாய ஸ்தாபனத்தின் அறிக்கையொன்று கூறுகின்றது.

அநுராதபுர மாவட்டத்தில் 158,988 குடும்பங்களும் குருணாகல மாவட்டத்தில் 150,170 குடும்பங்களும், புத்தளம் மாவட்டத்தில் 42,900 குடும்பங்களும், மொனராகல மாவட்டத்தில் 27,698 குடும்பங்களும், பொலநறுவ மாவட்டத்தில் 30,419 குடும்பங்களும், மாத்தளை மாவட் டத்தில் 16,432 குடும்பங்களும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 8,382 குடும்பங்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

# இலஞ்சம் மற்றும் ஊழல் நாட்டில் அதிகரிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவில் நாளுக்குநாள் இலஞ்சம் மற்றும் ஊழல்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இந்தவிடயம் வெளிக் கொணரப்பட்டது.

நாட்டின் சீரற்ற பொருளாதாரக் கொள்கை, சட்ட இறுக்கமின்மை மற்றும் அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள அளவானது வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடும்போது பாரிய குறையாகக் காணப்படுவது என்பதுவே இதற்கான காரணங்கள் என இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் உறுப்பினரான கிங்ஸ்லி விக்கிரமசூரிய தெரிவித்தார்.

# கொழும்பில் முக்கிய பகுதிகளில் இராணுவம்,பொலிஸ் தேடுதல்

(கொழும்பு)

கொழும்பில் முக்கிய இடங்களில் இராணுவத்தினரும் பொலிசாரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாகத் தெரியவருகிறது.

கடந்த சனிக்கிழமை முதல் இந் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இதன்போது எவரும் கைது செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுவதுடன் ஆயுத பாணிகளின் ஊடுருவலைக் கட்டுப்படுத்தவே இவ்வாறான தேடுதல் நடவடிக்கைகள் திடீரென இடம்பெறக் காரணம் என பொலிசார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு நகரின் பாதுகாப்புக் கருதி மேலும்பல பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட விருப்பதாகவும் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## ——— பாலியல் துஷ்பிரயோகம் ———

# மாகாண சபை உறுப்பினரை கைது செய்ய உத்தரவு

கொழும்பு நீதிமன்ற பிரதம மாஜிஸ்ரேட்டும், மேலதிக மாவட்ட நீதிபதியுமான சரோஜின குசலா வீரவர்தன,ஐ.தே.கட்சியைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினரான துமிந்த சில்வாவை கைது செய்து நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

தேசிய சிறுவர்பாதுகாப்பு சபையின் மனுதொடர்பாகவே இவர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இம்மாதம் 6ஆம் திகதி மேற்படி சந்தேகநபர் 13 வயதுச் சிறுமியை பாலியல்துஷ்பிரயோகம் செய்துள்ளதாக தேசிய சிறுவர் பாதகாப்புப் பிரிவு பொலிஸ் பரிசோதகர் விஜயசேன முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார்

அம் முறைப்பாட்டில் சந்தேக நபர் 2002 ஆம் ஆண்டு முதல் அச்சிறுமியின் வீட்டுக்கு வந்து சென்றதாகவும் ஒரு சமயம் அச் சிறுமியின் மூத்த சகோதரிகளையும் இவர் கடத்திச் சென்ற தாகவும் கூறியதுடன் அச்சிறுமி மீதுபல தடவைமுறைகேடாக நடந்துகொண்டார் எனவும் தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக விசாரணை செய்யும் கொழும்பு நீதிமன்றம் சந் தேகநபர் நாட்டைவிட்டு வெளியே றாது கண்காணிக்குமாறும் அவ ருக்கு கடவுச்சீட்டு எதனையும் வழங்க வேண்டாம் எனவும் உத்தரவிட்டுள்ளது.

# வீதித்தடையில் நிறுத்தாது சென்ற ஆட்டோ மீது துப்பாக்கிப் பிரயோகம்

## -சாரதியுட்பட இருவர் படுகாயம்

(கொழும்பு)

பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இருவர் படுகாயம் அடைந்த சம்பவமொன்று சிறிலங்காவின் கொஸ்கொட-அகுன்கல்ல பொலிஸ் பிரிவில் இடம்பெற்றது.

பொலிஸ் சோதனைச் சாவடியொன்றைத் தாண்டிச்சென்ற முச்சக்கரவண்டியின் மீது துப்பாக்கிச்சூடு நடாத்தப்பட்டதில் அதன் சாரதியும், பயணியொருவருமே படுகாயம் அடைந்த நிலையில் 'கரப்பிற்றிய' வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீதித்தடையில் நிறுத்தாது சென்றதனாலேயே இம்முச்சக்கர வண்டிமீது தாக்குதல் நடாத்தப்பட்டதாக பொலிசார் கூறியுள்ளனர்.


**மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கம் [வ.து]**

**சைக்கிள் புதிய உதிரிப்பாகங்கள், லொறிக்குரிய பழைய ரயர்கள்**

**ஏலத்தில் விற்பனை**

• மேற்படி புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கத்திற்கு சொந்தமான சைக்கிள் புதிய உதிரிப்பாகப் பொருட்கள், லொறிக்குரிய பழைய ரயர்கள் ஆகியன 2004.08.21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு தலைமைப்பணிமனையில் ஏலத்தில்விற்பனைக்கு விடப்படவுள்ளது எனவே மேற்படி பொருட்களை ஏலத்தில் பெற விரும்புவோர் குறித்த திகதியில் தலைமைப்பணிமனைக்கு சமூகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்,
புதுக்குடியிருப்பு
ப.நோ.கூ.சங்கம் (வ.து)

(சி-9177)



**31ஆம் நாள் நினைவஞ்சலி**

பிறப்பு
24 - 08 - 1958



இறப்பு
13 - 07 - 2004

**திருமதி இந்திராணி வேல்முருகையா**

**திதி: அமரபட்ச துவாதசி**

அருள்மிரு பொறிக்கடவை அம்மன் ஆலய பூசகர் வேதவனம் முருகையா ஐயா அவர்களின் அன்புத் துணைவி அமரர் வே. இந்திராணி அவர்களின் 31ஆம் நாள் நினைவில் எமது இதய அஞ்சலிகளை சமர்ப்பணமாக்குகின்றோம். அன்னாரின் ஆன்மா சாந்தி பெற எல்லாம் வல்ல அம்பிகையை வேண்டித் துதிக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அறங்காவல் சபையினர்,
அருள்மிகு பொறிக்கடவை
அம்மன் ஆலயம்.

குஞ்சுப்பரந்தன்,
பரந்தன்.

(4902)



**பணிநிலை வேண்டுகை**

ஆயப்பகுதியிற் கீழ்க்குறிப்பிடப்படும் பணிநிலைக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

✡ **பணிநிலை:- கணினித்தரவு பதியுநர்**

✡ **தகைமை:-**

01. எம்.எஸ்.ஒபீஸ் கற்கை நெறி முழுமை செய்திருத்தல் வேண்டும்.

02. க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்:- $\frac{3300 - 4300}{10 \times 100} + 2000$

தகுதியுடையவர்கள் 2004.08.20 ஆம் நாள் காலை 10.00 மணிக்கு நடுவப்பணியகம், ஆயப்பகுதி, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு கீழ்க் குறிப்பிடப்படும் சான்றிதழ்களுடன் வருகை தரவும்.

1. தன்வரலாற்றுச் சான்றிதழ்
2. கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.
3. ஏனைய தகைமைகளையும் பட்டறிவையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்.

மனிதவளமேலாளர்,
ஆயப்பகுதி,
நிதித்துறை.

(சி-9777)

# தமிழீழ மாவட்ட நீதிமன்று-மன்னார்

வழ/இல: 117/03
தன்மை : மணநீக்கம்

வழக்காளி
தர்மசீலன் ஜெயகௌரி,
இல-35, சோலை,
வன்னேரிக்குளம்.

எதிராளி
சபாரத்தினம்-தர்மசீலன்,
செட்டியகுறிச்சி,
பூநகரி.

## இடைக்காலத் தீர்வை

இந்த 2004 ஆம் ஆண்டு 03 ஆம் மாதம் 26 ஆம் நாள் இவ்வழக்கு மன்றின் நீதியாளர் திரு.செ.மயூரன் அவர்கள் முன்னிலையில் திறந்த அமர்வில் இருபகுதியினர் சமூகத்தில் கூப்பிடப்பட்ட போது அன்றைய தினம் தனக்கு மறுமொழியணைக்கத் தவணை கோரிய எதிராளி மன்றில் தவணையைப் பெற்ற பின்னர் மன்றில் தோன்றாமல் இருந்தமையால் மன்று இவ்வழக்கை வழக்காளியின சமூகத்தில் 2004-06-31 அன்று ஒருமுக விளக்கம் மேற்கொண்டு வழக்காளியின் உரிமைக் கோரிக்கையின் படி இடைக்காலத் தீர்வை பதியுமாறு கட்டளை வழங்கியமைக்கமைவாக வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் இடம் பெற்ற 2332ஆம் இலக்கத்தில் நிறைவேறிய பதிவுத் திருமணத்தினை இரத்துச் செய்து கொள்வதுடன் இருவரும் திருமணத்திற்கு முன்பு இருந்த நிலையை அடைவார்கள் என வெளிப்படுத்துவதுடன் எதிராளி வழக்காளியின் பராமரிப்பிலுள்ள குழந்தையான தர்மசீலன் தனுசன் என்பவருக்கு 75000/-ஐ நிரந்தர வைப்பிலிட வேண்டும் என இடைக்காலத் தீர்வை பதியப்படுகின்றது.

வரைந்தவர் வழக்காளி,
சட்டவாளர்.
செல்வி-தயாநிதிசுப்பிரமணியம்
வன்னேரிக்குளம் கிளிநொச்சி.

திரு. செ.மயூரன்,
நீதியாளர் ,
தமிழீழ மாவட்ட நீதிமன்று ,
மன்னார்.

(4900)

# தமிழீழ மாவட்ட நீதிமன்று – மன்னார்.

வழ இல : 117
தன்மை :- மணநீக்கம்

வழக்காளி :-
தர்மசீலன் ஜெயகௌரி
இல :- 35 சோலை,
வன்னேரிக்குளம்,
கிளிநொச்சி.

எதிராளி :-
சபாரத்தினம் தர்மசீலன்
செட்டியகுறிச்சி, பூநகரி.

## பகிரங்க அறிவித்தல்

மேலே பெயர் முகவரி இடப்பட்ட எதிராளியான உமக்கு எதிராக வழக்காளியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், எதிராளியாகிய நீர் வழக்கு நடவடிக்கைக்கு சமூகம் கொடுக்காமையினால் உமக்கு எதிராக ஒருமுக விளக்கம் நடைபெற்றது. அதன் அடிப்படையில் இடைக் காலத்தீர்வை இத்துடன் பகிரங்கமாக பிரசுரிக்கப் படுகிறது. எனவே இவ் இடைக்காலத் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படுவதற்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் இவ் பகிரங்க அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 21 நாட்களுக்குள் மன்றில் தோன்றி நடவடிக்கை எடுக்கு மாறு கேட்கப்படுகின்றீர். தவறின் இவ் இடைக்காலத் தீர்வை, முற்றான தீர்வை யாக்கப்பட்டு நீதிமன்றினால் வழக்காளியின் உரிமைக்கோரிக்கை நடைமுறைப் படுத்தப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

"நீதிமன்றின் கட்டளைப்படி"

பதிவாளர்,
தமிழீழ மாவட்டநீதிமன்று,
மன்னார்.

(4899)

# பிரதம பொறியியலாளர் அலுவலகம்

## கட்டடங்கள் திணைக்களம்(மாகாணம்) கிளிநொச்சி

01 கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கிளிநொச்சி கட்டடங்கள் திணைக்களப் பிரதம பொறியியலாளர் அலுவலக கேள்விச் சபையால் 2004 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 30 ஆம் திகதி (திங்கட்கிழமை) பி.ப.3.00 மணிவரை கிருஷ்ணன் கோவிலடியில் உள்ள கிளிநொச்சி கட்டடத் திணைக்களப் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தினால் அலுவலக நேரத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாக எமது அலுவலகத்தினால் திறக்கப்படும். கேள்வி கோருபவர் அல்லது அவரால் முறைப்படி அங்கீகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் கேள்விகள் திறக்கப்படும்போது சமூகமளிக்கும் படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

02 நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்குக் கீழே குறிக்கப்படும் தரவுகளையுடைய அல்லது அதற்கு மேற்பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப்பத்திரங்கள் கோருவதற்குத் தகுதியுடையவராவர்.

03 ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப்புத்தகத்தை கிருஷ்ணன் கோவிலடியிலுள்ள கிளிநொச்சி கட்டட திணைக்களப் பிரதமர் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

04 தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தைக் கிருஷ்ணன் கோவிலடியில் உள்ள கிளிநொச்சி கட்டடத் திணைக்கள(மாகாணம்) பிரதம பொறியிலாளர் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக் கேள்விப்பத்திரங்களை 2004 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிவரை பிரதம பொறியியலாளர் அலுவலகம்,கட்டடங்கள் திணைக்களம்,கிளிநொச்சியில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விபரம் | பதிவு செய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | நிறை வேற்றும் காலம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|---|---|
| 01. யோகர் சுவாமிகள் திருவடி நிலையக் கட்டடம் 111 கிளிநொச்சி | எம்.09 | 9000.00 | 03 மாதம் | 1000.00 |
| 02. கரைச்சி சிறுவர் இல்லம்: குருகுலம் | எம்.09 | 8000.00 | 03 மாதம் | 1000.00 |

05 கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோகிக்கப்படும்.

06 கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம். மேலதிக விபரங்களை கிளிநொச்சி கட்டடத் திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம பொறியியலாளர்,
கட்டடங்கள் திணைக்களம்(மாகாணம்),
கிளிநொச்சி.

(சி.9782)

# சங்கக்கார, ஜெயவர்த்தன சிறப்பு துடுப்பாட்டம்

## சிறிலங்காவுக்கு வலுவான ஓட்ட எண்ணிக்கை



சிறிலங்கா - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்றுவரும் இரண்டாவதும், இறுதியும், தொடரைத் தீர்மானிப்பதுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதலாம் நாளான நேற்று முதலில் துடுப்பெடுத்தாடும் சிறிலங்கா அணி பலமான நிலையை அடைந்துள்ளது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அணித் தலைவர் அத்தப்பத்து முதலில் துடுப்பாடுவதாகத் தெரிவித்தார்.

இதன்படி ஆரம்பத்தில் 4 ஓட்டங்களுக்கு அத்தப்பத்துவின் விக்கெட்டை இழந்த சிறிலங்கா, குமார் சங்கக்காரவின் அதிரடி ஆட்டத்தின் மூலம் பெற்ற 153 ஓட்டங்கள் அணியை 303 ஓட்டங்கள் பெற உதவியுள்ளது.

மூன்று விக்கெட்டுக்கள் இழக்கப்பட்டுள்ளது. அத்தப்பத்து 4, ஜெயசூரியா 43, ஜெயவர்த்தன 82 ஓட்டங்களை முறையே பெற்று ஆட்டமிழந்தனர். சங்கக்கார, சமிந்தவாஸ் ஆகியோர் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.



இப்போட்டியில் சிறிலங்கா அணி வெற்றிபெற்றால் தரவரிசையில் முன்னேற வாய்ப்புள்ளது. சமப்படுத்தினால் 100 புள்ளிகள். வெற்றி பெற்றால் 103 புள்ளிகள் பெறும். தற்போது 99 புள்ளிகளைப் பெற்றுள்ளது. தென்னாபிரிக்கா 106 புள்ளிகளைப் பெற்றுள்ளது. சமப்படுத்தினால் 105 புள்ளிகள், தோல்வியைத் தழுவினால் 102 புள்ளிகள்.இந்தப் போட்டியில் சிறிலங்கா அணி வெற்றிபெற்றால் இரண்டாவது அல்லது மூன்றாவது இடத்தைப் பெறும் வாய்ப்பு இருக்கும்.

## தோள்பட்டையில் உபாதை முரளி போட்டியில் இருந்து விலகினார்



தோள்பட்டையில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலிருந்து சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் விலகிக் கொண்டுள்ளார்.

அவரது தோள்பட்டையில் ஒருவகைத் திரவம் திரண்டிருப்பதாகவும், அதனை அகற்ற வேண்டியுள்ளதாக மருத்துவ ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

இதனால், தென்னாபிரிக்க, சிறிலங்கா அணிகளுக்கிடையிலான ஐந்து ஒரு நாள் போட்டி மற்றும் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. மினி உலகக் கிண்ண போட்டிகளிலும் முரளிதரன் விளையாட முடியாத நிலை ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மேற்கிந்திய தீவு அணியில் ஆறு வீரர்கள் நீக்கம்

### லாறாவின் தலைமைப் பதவி பறிப்பு?

செப்ரெம்பர் மாதம் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள மினி உலகக்கிண்ண போட்டிக்கான மேற்கிந்தியத்தீவு அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்துடனான மோசமான படுதோல்வியை அடுத்து மேற்கிந்தியத்தீவில் ஆறு வீரர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

இதில் முக்கியமாக ரிட்லி ஜேக்கப்ஸ் நீக்கப்பட்டுள்ளார். இவர் மிக முக்கியமான மூத்த வீரராவார்.

மேர்வின்டிலான், வேவல் கெய்ன்ஸ் மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அணிக்கான அணித்தலைவர் யார் என்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. லாறா அணியில் இடம்பிடித்துள்ளார். இது பின்னரே தீர்மானிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி லாறாவின் அணித்தலைவர் பதவி பறிக்கப்படும் நிலை ஏற்படும் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## பட்டம் வென்றார் ஆனந்த்



ஜேர்மனியில் நடைபெற்ற மெய்ன்ஸ் கிளாஸ்ரிக் யூ.எல் சதுரங்கப் போட்டியில் சம்பியன்பட்டத்தை இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் கைப்பற்றிக் கொண்டார்.இது அவர் தொடர்ச்சியாகப் பெற்ற நான்காவது பட்டம். எட்டு ஆட்டங்கள் கொண்ட போட்டியில் நேற்று முன்தினம் நடந்த ஏழாவது ஆட்டத்தில ஸ்பெயினின் அலக்ஸி யூறோவிற்கு எதிராக சமன் செய்ததில் அதிக புள்ளிகள் பெற்று ஆனந்த் முதலிடம் பெற்றார். இந்த ஆண்டில் ஆனந்த் பெறும் மூன்றாவது மிகப்பெரிய பட்டம் இது.

## ஐ.சி.சி.போட்டிக்கான நியூசிலாந்து அணி அறிவிப்பு

இங்கிலாந்தில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. மினி உலககிண்ண போட்டிகளில் பங்கேற்கவுள்ள நியூசிலாந்து அணிவீரர்களின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வணியின் சகலதுறை ஆட்டக்காரரான ஜேம்ஸ் பிராங்லினுக்குப் பதிலாக கைல்மில்ஸ் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார். பிராங்கலினின் காயம் காரணமாக கடந்த ஜூன்மாதம் இங்கிலாந்துக்கெதிரான போட்டிகளிலும் பங்கேற்கவில்லை. அண்மையில் மூன்று வீரர்கள் மீது நடத்தப்பட்ட உடற்தகுதி பரீட்சையில் கைல்ஸ், ட.்.பி, கெயின்ஸ் ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

அணிவிபரம்:-

ஸ்ரீபன் பிளமிங் (தலைவர்) நதன் ஆஸ்லே, இயன்பட்லர், கிறிஸ்கெயின்ஸ். கிறிஸ்ஹரிஸ், ஹமிஸ் மார்ஷல், பிரண்டண் மக்கலம், கிறேக் மக்மிலன், கயில்மில்ஸ், ஜோக்கப் ஓரம், மிக்கேல் பப்ஸ்ஸ் கொட்ஸ்டைரிஸ், டரில்ட.்.பி, டேனியல் வெட்டோரி.

## ஒலிம்பிக் ஜோதியை 100 பேர் ஏந்திச் செல்வர்

ஒலிம்பிக் தொடக்கவிழா நிகழ்ச்சி யில் ஜோதியை 100 பேர் கையில் ஏந்திச் செல்கின்றனர். 53 கிலோ மீற்றர் தூரம் மாபெரும் விளை யாட்டு திருவிழாவான ஒலிம்பிக் போட்டி நாளை கோலாகல கொண் டாட்டத்துடன் எதென்சில் தொடங் குகிறது. தொடக்க விழா நிகழ்ச்சி யின் போது ஒலிம்பிக் ஜோதி 53 கிலோ மீற்றர் தொலைவில் இருந்து தொடக்க விழா நிகழ்ச்சி நடைபெறும் பிரதான மைதானத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது.

ஒலிம்பிக் ஜோதியை 100 பேர் கையில் ஏந்தி வருகின்றனர். சூப்பர் மாடல் அழகி நயோமி கேம்பல் தலைமையில் பொப் பாடகர்கள், ஒபராபாடகர்கள், சிற்பிகள், பிரபல அதிபர்கள் உட்பட 100 பேர் ஜோதியை ஏந்திச் செல்லும் நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.

## கென்யாவின் ஒரேயொரு ஒலிம்பிக் வீரர் ஒலிம்பிக் கிராமத்திலிருந்து வெளியேற்றம்

எதென்ஸ் ஒலிம்பிக் குத்துச் சண்டைப் போட்டியில் பங்குபற்றவிருந்த ஒரேயொரு கென்ய வீரர் ஒலிம்பிக் கிராமத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

எதென்சில் நடத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனையின் போது அவர் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்தைப் பயன்படுத்தியிருந்தமை நிரூபணமானதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகள் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்துப் பாவனைக்காக இவர் ஒலிம்பிக்கில் இருந்து தூக்கியெறியப்பட்டுள்ளார்.

அத்துடன் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்துப் பாவனைக்காக வெளியேற்றப்பட்ட முதலாம் நபர் என்ற அவப்பெயரை கென்ய குத்துச் சண்டை வீரர் டேவிட் முனிசியா தனதாக்கிக் கொண்டுள்ளார்.

## 6 மாதம் தாய்மை அடைந்துள்ள ஜேர்மனி வீராங்கனை ஒலிம்பிக்கில்

ஜேர்மனியின் அம்பெய்தல் வீராங்கனை கோணவியா போல் 6மாதம் தாய்மையடைந்துள்ள நிலையில் எதென்ஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்கவுள்ளார். இவருக்கு ஏற்கனவே மூன்று வயதுக் குழந்தை ஒன்றும் உள்ளது. 2000ஆம் ஆண்டு போட்டிகளில் இவர் பங்கேற்றவேளை அக் குழந்தை அவரது வயிற்றில் ஓரிரு வார குழந்தையாக இருந்தது. 1996ஆம் ஆண்டும், 2000ஆம் ஆண்டும் அம்பெய்யும் போட்டியில் முறையே வெள்ளி, வெண்கலப்பதக்கங்களை இவர் பெற்றுள்ளார். 2004ஆம் ஆண்டு போட்டிகளில் பங்கேற்க எதுவித உடல் உபாதைகளும் தமக்கு தடையாக இல்லை என அவர் தெரிவிக்கிறார்.

## எதென்ஸ் ஒலிம்பிக் போட்டி - 2004 நாளை கோலாகலமாக ஆரம்பம்










எதென்சில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கவிருக்கும் ஜப்பானைச் சேர்ந்த வில்லெறியும் போட்டியாளர் சயோகோ கவாச்சி, இந்திய ஹொக்கி அணியினர் பயிற்சியில் ஈடுபடுபதையும், 200, 400 மீற்றர் ஓட்ட ஆண்களுக்கான உலக சாதனையாளரும், தனிப்பட்ட பதக்கங்களுக்குரியவருமாக மைக்கல் பிலிப்ஸ் போட்டியின் ஆரம்ப நிகழ்வுக்கு முன் செய்தியாளர் மாநாட்டில் சமுகமளித்திருப்பதையும் முறையே படங்களில் காணலாம்.

## சிந்தனைக்கு



சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவ தில்லை.

தமிழீழ தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 12-08-2004
மின் அஞ்சல் Daily@eezhanatham.com
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

## சாந்தியடைய வாய்ப்பில்லை.

சிறிலங்காவின் இரு பிரதமர்களின் மகனும், சனாதிபதியின் சகோதரருமான அநுரா பண்டாரநாயக்கவை கோமாளி என்கின்றதா? அன்றி துரதிஷ்டம் பிடித்தவர் என்கின்றதா? ஏனெனில் அவரின் நடவடிக்கைகளும், பேட்டிகளும் அவ்வாறானவையாகவே உள்ளன.

அநுரா பண்டாரநாயக்க சில வேளைகளில் பேசுவதைக்கேட்டால் அவரைக் கோமாளி போல் எண்ண வைக்கிறது. ஆனால் அவரின் அபிலாசைகள் நிறைவேறாமல் போகும்போது அவரை அதிஷ்டமற்றவர் என்றே கொள்ளவேண்டியுள்ளது.

இதனால் விடுதலைப்புலிகளுடன் போரிடவும் தயார், சமாதானம் பேசவும் தயார் என அவர் சவால்விட்டபோது எவரும் அதைச் 'சீரியசாக' எடுக்கவில்லை.கேலிக்குரியதாகவே பார்த்தனர். அடுத்ததாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐ.ம.சு.முன்னணியின் தலைமைப்பதவியை இராஜினாமாச்செய்த போது, அதன் தலைமைப் பதவிக்கு முயற்சித்தார். ஆனால் எவரும் அவருக்குத் துணைபோகவில்லை.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயற்குழு ஐ.ம.சு. முன்னணியின் தலைமைப்பதவிக்கு முன்னாள் பிரதமர் ரட்ண சிறிவிக்கிரமநாயக்கவை தெரிவுசெய்துள்ளது. அதாவது அநுரா பண்டாரநாயக்கவின் விருப்பம் நிறைவேறவில்லை. ஆயினும் அநுரா பண்டாரநாயக்க தனது முயற்சியைக் கைவிடவில்லை. ஐ.ம.சு. முன்னணியின் தலைமைப்பதவிக்கு வேளைவரும்போது முயற்சிப்பேன் என்கிறார்.

இதேவேளை, அநுராபண்டார நாயக்கவின் தலைமைப்பதவி, அபிலாசை ஐ.ம.சு.முன்னணிக்கானதாக மட்டும் இருந்ததில்லை. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைக்கானதிலிருந்து பிரதமர் பதவி, சனாதிபதி வேட்பாளர் என நீண்டு தற்பொழுது ஐ.ம.சு. முன்னணியின் தலைமைப்பதவியில் வந்துநிற்கின்றது என்பதே வரலாறாகும்.

ஆனால், அநுராபண்டாரநாயக்கவின் அபிலாசைகளை நிறைவேற்றச் சுதந்திரக் கட்சியில் பெரும்பான்மையினர் என்றுமே தயாராக இருந்ததில்லை. கட்சியின் தலைமைப்பதவிக்கு அநுரா வருவதற்குத் தடையாக தமக்கை சந்திரிகா குமாரதுங்க புகுந்து குழப்பி அடித்தார். தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்க கூட அநுராவின் தலைமைத்துவ விருப்பத்தை நிறைவேற்றி வைக்கவில்லை.

அடுத்ததாக பிரதமர் பதவிக்கான அவரது முயற்சியும் தோல்வியில் முடிவடைந்துவிட்டது. சுதந்திரக்கட்சிக்காரர் அவரைத் தோற்கடித்து மகிந்தராஜபக்ஷவை பிரதமராக்கிவிட்டனர். சனாதிபதி சலனப்பட்டபோதும் அநுராவிற்கு இவ்வாய்ப்புக் கிட்டவில்லை.

அதுமட்டுமல்ல, அநுராபண்டாரநாயக்க போகும் இடங்கள் கூட அதிர்ஷ்டம் கைவிட்ட இடங்களாகவே இருந்தன. மாறாகச் சிலவேளைகளில் அனுகூலங்கள் கிடைக்கப்பெற்றதாயினும் அவை முழுமைப் பட்டவையாக இருக்கவில்லை. அதன்பின்னர் அநுராவின் குழப்பமும் சேர்ந்து கிடைத்ததும் கைவிட்டுப்போகும் நிலையே ஏற்பட்டுள்ளது.

இந்தவகையிலேயே தற்பொழுது ஐ.ம.சு.முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்துள்ளபோதும் அது தனது பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத நிலையில் உள்ளது. அத்தோடு இக்கூட்டணியோ இன்று பெரும் நெருக்கடியைச் சந்தித்த வண்ணமுள்ளது. இதன் விளைவாகவே சனாதிபதி சந்திரிகா தலைமைப் பதவியை இராஜினாமாச் செய்தார்.

இந்நிலையில், தற்பொழுது அநுராபண்டாரநாயக்க ஐ.ம.சு. முன்னணியின் தலைமைத்துவத்திற்கு ஆவல் கொண்டவராகவுள்ளார். ஆனால், அவரது ஆசை நிறைவுசெய்யப்படு வதற்கான வாய்ப்புக்கள் பிரகாசமானதாக இல்லை. ஏனெனில் தற்போதைய நிலை தொடர்ந்தால் ஐ.ம.சு.முன்னணியின் எதிர்காலமே கேள்விக்குள்ளாகும் நிலையே உள்ளது.

இந்தவகையில், பார்க்கையில், அநுராபண்டாரநாயக்கவின் ஆத்மா சாந்தியடைவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றே கூறலாம். ஏனெனில் அவரின் தலைமைத்துவ அபிலாசை நிறைவேறுவதற்கான எந்தவாய்ப்பும் அற்றதொரு நிலையே காணப்படுகின்றது. ஆனால், அநுரா பண்டாரநாயக்கவோ அதனைப்புரிந்துகொள்ளாது கோமாளித்தனமாகப் பேசிக்கொண்டிருக்கிறார். இது அவரது விசேடித்த குணநலன் (கரக்டர்) போன்றுள்ளது. இதற்காக அவருக்கு அனுதாபப்படுவதைத் தவிர வேறு எதைத் தான் தெரிவிக்க முடியும்.

-தமிழ் மொழிமூல ஆசிரியர் நியமனம்-

# அரசின் அசமந்தம் குறித்து கல்விக்கழகப் பொறுப்பாளர்

# வடக்குகிழக்கு மனிதஉரிமை செயலகத்தில் ஆராய்வு

(அலுவலகசெய்தியாளர்)

வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் ம.சே. கருணாரட்ணம் அடிகளார் அவர்களை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் அவர்கள் சந்தித்து, தமிழ் மொழி மூல ஆசிரியர் நியமனத்தில் சிறிலங்கா அரசாங்கம் காட்டி வரும் அசமந்தப் போக்குபற்றி கலந்துரையாடியுள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் அமைந்துள்ள மனித உரிமைகள் செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது ஆட்சி பீடமேறும் சிங்கள அரசாங்கங்கள் தொடர்ச்சியாக தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கு நியமனங்களை வழங்குவதில் இழுத்தடிப்புக்களை மேற்கொண்டு வருவது பற்றி கலந்துரையாடியதோடு, தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் பற்றாக்குறை பற்றிய விகிதாசார விபரங்களையும் அவருக்கு வழங்கியுள்ளார்.

இதனடிப்படையில் தேசிய மட்டத்தில் தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கு 25 விகித பற்றாக்குறை நிலவி வரும் இதேவேளை வடக்கு கிழக்கில் 30 வீதமான ஆசிரியர் பற்றாக்குறை கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக நிலவி வருகின்றது என்பதனை புள்ளி விபரம் மூலம் சுட்டிக்காட்டிய தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் மாணவர்களின் கல்வித் தரத்தின் அடிப்படையில் 6 வயது தொடக்கம் 11 வயது வரையுள்ள மாணவர்களுக்கான ஆசிரியர்களில் 10687 பேர் தேவையாக உள்ளதாகவும் ஆனால் தற்போது 7582 பேரே உள்ளனர் 3105 பேர் தேவையாக உள்ளனர் எனவும், இடைநிலை மாணவர்களான 12-17 வயது எல்லையை கொண்ட 252519 மாணவர்களுக்கு கற்பிக்க தேவையான ஆசிரியர்கள் 9154 பேர். ஆனால் தற்போது 7322 பேரே உள்ளனர் 1832 பேர் பற்றாக குறையாக வுள்ளனர் எனப் புள்ளி விபரத்தினை தெளிவாக வழங்கிய அவர் வடக்கு கிழக்கில் தமிழ் மொழி மூல ஆசிரியர்களில் மொத்தமாக 4937 பேர் பற்றாக்குறையாக வுள்ளனர் என்ற புள்ளி விபரங்களையும் வழங்கியுள்ளார்.

மேலும் ஒட்டு மொத்தமாக இலங்கையில் 9788 தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவுள்ளனர் என்பதையும் சுட்டிக் காட்டியதோடு, கல்வி கற்கும் வயது டைய தமிழ் மாணவர்களில் 18 வயதிற்குட்பட்டோர் ஆயுதப் போராட்டத்திற்குள் ஈர்க்கப்படுகின்றரென கவலை கொள்ளும் உலக தொண்டு நிறுவனங்கள் சில ஐ.நா.சபையின் சிறுவர் உரிமை தொடர்பான பட்டயத்தில் குறிப்பிடப்படும் கல்வியுரிமையை வழங்க வேண்டிய சிறிலங்கா அரசு அதற்கு எதிர்மாறாக செயற்பட்டு வருவதைக்கண்டும் காணாததுமாக இருப்பது கவலை தரக்கூடிய விடையமென்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார். (ச,தீ)

# அரசாங்கத்தின் திறமையின்மையால் மக்கள் வருந்தும் நிலை ஏற்பட்டுள்ளது

-முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகே

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் திறமையின்மையினால் மக்கள் வருந்திக் கொண்டிருக்கிறார்கள் என ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் சுற்றுலாத்துறை அமைச்சரான காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செய்தியாளர் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இக்குற்றச் சாட்டினைக் கூறியுள்ளார். மேலும் "விலை உயர்வுகள் சாதாரண நிகழ்ச்சியாகி மக்களின் சுமையை மேலும் அதிகரிக்கின்றன. சில பொருட்கள் இறக்குமதி செய்யப் படுவதால் நாட்டின் நாணயம் பலமின்றி உள்ளது.

இன்று நிலமை மிகவும் அச்சமூட்டுவதாக உள்ளது. அரசாங்கத் திடம் கொள்கையோ, அர்த்தமுள்ள வழிமுறையோ கிடையாது. மோசமான பொருளாதார நிலமையில் இருந்து மக்களை திசை திருப்புவதாக எதிர்க்கட்சி உறுப்பினர்களின் மீது சேறுபூசும் வகையில் அதன் செயற்பாடுகள் அமைகின்றன.

சமாதானமே இன்று மிக முக்கிய தேவையாக உள்ளது. சமாதானப் பேச்சுக்களை விரைவில் தொடங்கா விட்டால் அரசாங்கமும் மக்களும் தண்டிக்கப்படுவார்கள்" என்றும் காமினி லொகுகே தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோதமாக இந்தியாவிற்குள் நுழைந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் பொலிசாரல் கைது

(சென்னை)

சட்டவிரோதமாக இந்தியாவிற்குள் நுழைந்த ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் தமிழ் நாட்டுப் பொலிசாரினால் கைது செய்யப் பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 31 வயதுடைய ராஜநாயகம் என்ற குடும்பஸ்தரே கைதாகியுள்ளவர்.

தனது மனைவி, குழந்தை சகிதம் தமிழ்நாட்டிற்குச் சென்ற இவரைத் தனுஷ்கோடி கரையில் பொலிசார் தடுத்துவைத்துள்ளனர்.

உறவினர் ஒருவருடன் தொலைபேசியில் கதைப்பதற்காக சென்னைக்குச் சென்ற போதே இவரை பொலிசார் கைது செய்தனர்.

தான் படகோட்டிகளுக்கு பத்தாயிரம் ரூபா கட்டணம் செலுத்தியே குடும்பத்தினருடன் இந்தியாவிற்கு வந்ததாக தெரிவிக்கும் ராஜநாயகம் சட்ட விரோதமாக இந்தியாவிற்குள் நுழைய முற்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

# மாணவனைத் துன்புறுத்திய அதிபர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

மாணவனை பாலியல் ரீதியாகத் துன்புறுத்திய அதிபரொருவரை பொலிசார் கைது செய்துள்ளனர். நிக்கவரெட்டிய பொகஹமுல்ல மகாவித்தியாலய அதிபரே இதே பாடசாலையைச் சேர்ந்த பதினாறு வயது மாணவன் மீது குற்றம் புரிந்தமைக்காக கைதுசெய்யப்பட்டார்.

சென்ற வெள்ளி பாடசாலை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த மாணவனை அழைத்துச் சென்ற இவர், இரவு ஹோட்டல் ஒன்றில் வைத்து துன்புறுத்தியதாகவும், இவரிடமிருந்து தப்பிய மாணவன் ஹோட்டல் முகாமையாளர் ஊடாக பொலிசாருக்கு அறிவித்ததையடுத்தே இவர் கைதுசெய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

மாணவன் வைத்திய பரிசோதனைக்காக நிக்கவரெட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட அதிபர் தற்போது விளக்கமறியலில் உள்ளார்.

# "உண்மையான சமாதானத்தின் எதிரிகள் யார்?"

# ஜே.வி.பி. நடாத்தும் தொடர் கருத்தரங்கு

(கொழும்பு)

பொதுமக்களிடையே தொடர் பிரச்சாரங்களை ஜே.வி.பி. நடாத்தி வருகின்றது.

"உண்மையான சமாதானத்தின் எதிரிகள் யார்" என்ற தலைப்பில் தென்னிலங்கையின் பிரதான நகரங்களில் இத்தொடர் பிரச்சாரங்கள், கருத்தரங்குகளாக நடாத்தப் படுகின்றன.

ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, அரசியல் துறைத் தலைவர் அநுர திஸ்ஸ நாயக்க, பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச ஆகியோர் இப் பிரச்சாரங்களில் பிரதம பேச்சாளர்கள் ஆவார். இதன் முதல் நாள் பிரச்சாரக் கூட்டங்கள் நேற்று காலி நகரமண்டபத்திலும், பதுளை புதிய நூலக மண்டபத்திலும் நடைபெற்றன.

அடுத்த கூட்டங்கள் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை கண்டி தபால் நிலையத்திலும், 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மகரகம இளைஞர் மன்றத்திலும், 18ஆம் திகதி புதன் கிழமை தங்கல்ல மாநகர சபையிலும், 21ஆம் திகதி சனிக்கிழமை கேகாலை வரக்காப் பொல மாநகர சபையிலும் நடைபெறும் என கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மக்களின் எதிர்ப்பையும் மீறி படையினர்

# நெடுந்தீவு உபஅஞ்சலகத்தில் முகாம் அமைப்பு

## – கண்காணிப்புக் குழுவினர் நடவடிக்கை எடுக்கவில்லையென மக்கள் விசனம்

(தீவகம்)

மக்களது பல்வேறு விதமான எதிர்ப்புகள், கண்டனங்கள் மத்தியிலும் யாழ்தீவகத்தில் உள்ள நெடுந்தீவு உப அஞ்சல் அலுவலகத்தில் கடற்படையினர் புதியதொரு படைமுகாமை நிறுவியுள்ளனர்.

பொதுமக்களது இயல்பு வாழ்க்கைக்கு இடையூறாக மேற்படி பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் படைமுகாம் அமைக்கும் முயற்சிகள் கைவிடப்படல் வேண்டும் என அப்பகுதி மக்கள் தமது எதிர்ப்புகளை தெரிவித்த போதிலும் படையினர் மக்களது எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாது அங்கு புதிய தொரு படைமுகாமை நிறுவியுள்ளனர்.

கடந்தசில காலமாக நெடுந்தீவு உபஅஞ்சலகத்தில் புதியதொரு முகாம் ஒன்றைக் கடற்படையினர் நிறுவிவருவதைத் தடுத்து நிறுத்துமாறு கோரிக் கண்காணிப்புக்குழுவினரிடம் முறையிட்டுள்ள போதும் அதனை தடுத்து நிறுத்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இதேவேளை நேற்று அங்கு சென்ற யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவினர் புதியமுகாமையும் அதில் நிலை கொண்டுள்ளபடையினரையும் பார்வையிட்டுள்ளனர். (33)

### புலிகள்...

பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களே பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்ற நடைமுறையும், அவ்வறான சோதனைகளின்போது போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் பிரசன்னமாயிருக்க வேண்டும் என்பதையும் தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பு மீண்டும் வலியுறுத்தியது.

இந்த நிலையில் தாம் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் ஆட்கடத்தல் குற்றம் சுமத்தி கைது செய்த இரண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு உறுப்பினர்களையும் நாளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதெ காவல்துறை தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளது. நேற்று முற்பகல் 10 மணிமுதல் இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தரப்பில் அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் குயிலின்பன் தலைமையிலான குழுவினர் பங்கேற்றனர். காவல்துறை தரப்பில் விசேட அதிரடிப்படையின் சிரேஸ்ட அதிகாரி ரட்நாயக்க மற்றும் அதிரடிப்படையின் அத்தியட்சகர் உப்புல் செனவிரட்ன தலைமையிலான குழுவினர் பங்கேற்றனர்.

### சமாதானம் தொடர்...

கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக இவர்கள் ஜயந்த தனபாலவிடம் விளக்கியுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று கொழும்பில் ஊடக மாநாட்டை நடத்திய சிவில் சமூக அமைப்பின் அமைப்பாளர் குமார்ரூபசிங்க, தென்னிலங்கையின் அரசியல் ஸ்திரமின்மை மற்றும் சமாதானம் தொடர்பில் நிலையான கொள்கையின்மை என்பன குறித்து தமிழ்ச்செல்வன் அதிருப்தி வெளியிட்டதை தாம் ஜயந்த தனபாலவின் கவனத்திற்குக் கொண்டுவந்ததாகத் தெரிவித்தார். இதற்குப் பதிலளித்த ஜயந்த தனபால, சனாதிபதி சமாதானம் முயற்சிகளை ஆரம்பிப்பது தொடர்பில் நோர்வேயிடம் தமது நிலைப்பாட்டை உரிய வகையில் தெரியப்படுத்தியுள்ளமை குறித்து தம்மிடம் தெரிவித்ததாகவும், குமார்ரூபசிங்க சுட்டிக்காட்டினார். இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமஸ்டி முறையிலான தீர்வை நாட்டின் 70 வீதமான மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். 20 வீதமான மக்கள் சமஸ்டி தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் கொண்டிருக்கவில்லை. 10 வீதமானோரே சமஸ்டித் தீர்வை எதிர்ப்பதாக குமார்ரூபசிங்க குறிப்பிட்டார். எனவே. நாட்டின் சமாதான முன்னெடுப்பை தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி தொடர்பில் பேச்சுக்களை ஆரம்பிப்பதன் மூலமே மேற்கொள்ளமுடியும் எனவும் குமார்ரூபசிங்க தெரிவித்தார்.

### அமெ...

நிறுவனம், நூலகம், கலாசார நிலையம் என்பனவும் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை, சந்தேகத்துக்குரிய துகள்கள் குறித்து பரிசோதனை நடத்துமாறு அரசாங்கத்தின் பிரதி இரசாயன பகுப்பாய்வாளரை அமெரிக்க தூதரக அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஆயினும் இந்தத் துகள்கள் குறித்து பரிசோதனை நடத்துவதற்குரிய வசதிகள் தங்களிடம் இல்லை எனப் பிரதி இரசாயன பகுப்பாய்வாளர் டபிள்யூ.டி.எம் குணரட்ண தெரிவித்தார்.

### கருணா...

செய்து கொலை செய்ய திட்டமிட்ட கருணா அணியினர் மூவருக்குப் பாதுகாப்பு வழங்கி ஏனைய உதவியினையும் நல்கியிருந்தனர்.

இந்தச் சம்பவத்தில் ஏற்பட்ட தவறு காரணமாக கைக்குண்டு ஒன்று வெடித்தமையால் ஒருவர் உயிரிழந்தும், ஏனைய இருவரும் தப்பியோடிய சம்பவம் கடந்த 24.06.2004 அன்று குருணாநாகலில் பொல் அத்தாபிட்டிய என்ற இடத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

விசாரணை நடைபெற்ற தினத்தன்று இவர்கள் இருவரும் இரகசியமாக அழைத்து வரப்பட்டதுடன், நீதிமன்றில் உட்பிரவேசிக்கும் அனைவரும் கடும் உடற்சோதனையின் பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டதுடன், விசாரணை நடைபெற்றபோது அனைவரும் வெளியேற்றப்பட்டதுடன் கதவுகள் மூடப்பட்ட நிலையிலேயே மேற்கொள்ளப்பட்டது.

### சமாதானம்...

நடவடிக்கைகள் தொடர்பாக ஆரம்பம் முதலே ஒரே நிலைப்பாட்டிலேயே இருப்பதாகவும் இதில் எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை எனவும் அமைச்சர் கூறினார்.

சனாதிபதியின் தலைமையிலேயே நிரந்தர சமாதானத்துக்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், நிரந்தர சமாதானமே சனாதிபதியினதும் கூட்டமைப்பினதும் தெளிவான நிலைப்பாடு ஆகும் என்றும் அவர் குறிப்பிட்டார். நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான செயற்திட்டத்துக்குள் நுழைவது குறித்த தீர்மானங்களை கூட்டமைப்புடனும் சனாதிபதியுடனும் இணைந்து செயற்படும் அதிகாரிகளே மேற்கொள்வர்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

முல்லைத்தீவு செல்வபுரத்தைச் சேர்ந்த எமது மின்சார நிலையப் பணியாளரான திரு. வி. சிவானந்தராசா அவர்களின் புதல்வி செல்வி சி. அர்ச்சனா 2004ஆம் ஆண்டு க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் தோற்றி 3A பெற்று, முல்லை மாவட்டத்தில் ஆறாவது நிலையினைப் பெற்றுக் கொண்டமைக்காகப் பாராட்டுதல்களையும், வாழ்த்தினையும் தெரிவிக்கின்றோம்.

அத்துடன் இம்மாணவிக்கு கற்பித்த முல்லைத்தீவு மகாவித்தியாலயம், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய ஆசிரியர்களுக்கும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம்.

*பணியாளர்கள், மின்சார நிலையம்,*
*கரைதுறைப்பற்று பிரதேசசபை,*
*முல்லைத்தீவு.*

(4678)


*யாழ்.பல்கலை பொது மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள*

# சனாதிபதியின் படத்தை அகற்றுக! கலைப்பீட ஒன்றியம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்பல்கலைக்கழக பொது மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள இலங்கை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உருவப்படத்தினை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரை கலைப்பீட மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.

நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற அனைத்து ஆண்டுகளையும் சேர்ந்த கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் பொதுக் கூட்டத்திலேயே மேற்படி உருவப்படத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் அதியுயர் பாதுகாப்பு வலயமெனக் கூறிக் கொண்டு மக்கள் குடியிருப்புக்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இலங்கை இராணுவத்தின் தலைவியாக அவர் இருப்பதனாலும், தமிழ் மக்கள் தமது இயல்பு வாழ்விற்கு திரும்ப ஏதுவானதோர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவதில் அவரது அக்கறையின்மையினையும் கண்டித்துள்ள கலைப்பீட மாணவர் ஒன்றியம் இக்காரணத்தினாலேயே அவரது உருவப்படம் வைக்கப்பட்டமைக்கு தாங்கள் எதிர்ப்புத்தெரிவிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே யாழ்.குடாநாடு படையினரால் 1996 ஆம் ஆண்டு முழுமையாக கைப்பற்றப்பட்டதையடுத்து அரசால் விடுக்கப்பட்ட விசேட சுற்று நிருபமொன்றில் சனாதிபதியின் படங்கள் அரச திணைக்களங்களில் தொங்கவிடப்படவேண்டுமென வலியுறுத்தப்பட்டிருந்தது. இதனைப் படைத்தரப்பும் கடுமையாக அமுல் படுத்தி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(23,33)

# வீரமுனை படுகொலை நினைவுநாள் இன்று துக்கதினமாக அனுஷ்டிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற வீரமுனை படுகொலை நடந்து இன்றுடன் பதின்னான்கு ஆண்டுகள் நிறைவடைவதை அடுத்து இன்றைய தினத்தை பூரண துக்கதினமாக அனுஷ்டிக்கும்படி பொது அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

கடந்த தொண்ணூறாம் ஆண்டு இதேதினத்தில் நடந்த இந்தக் கோரப்படு கொலையின்போது பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் எனப் பலதரப்பட்டவர்களையும் வீடு வீடாக நுழைந்த முஸ்லிம் ஊர்காவற்படையும் சிறிலங்கா இராணுவமும் கண் மூடித்தனமாக வெட்டியும், சுட்டும், கொன்று, வெறியாடியமை தெரிந்ததே.

இந்தக் கோரச்சம்பவத்திற்கு இலக்காகி ஐம்பத்தைந்து பேர் அப்போது பலியானமை குறிப்பிடத்தக்கது.

வீரமுனை. மல்வத்தை, வளத்தாப்பிட்டி, வீரச்சோலை, மல்லிகைத்தீவு ஆகிய கிராமங்களுக்குள் புகுந்த முஸ்லிம் ஊர்காவல் படையினரும், சிறிலங்கா இராணுவமும் இந்தக் கோரப்படு கொலையை நடத்தியிருந்தனர்.

### இடைத்தரகரின்...

போது நிதி மற்றும் பாதுகாப்பு விடயங்களே முக்கிய பிரச்சினைகளாக இருக்கும். அவ்வாறான பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து முடிவு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க நான் தயாராய் உள்ளேன். இதை நான் நோர்வேக்கு ஏற்கனவே தெரிவித்துள்ளேன். அத்துடன் சர்வதேச கடல் வளம் சர்வதேச மயப்பட்டிருப்பதால் சர்வதேச கடல் பரப்பில் இருக்கின்ற சில விடயங்களும் பேச்சுவார்த்தைகளின்போது ஆராயப்பட வேண்டியுள்ளது. அதாவது இலங்கைக்கு வருகின்ற கப்பல்களை தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டில் இருக்கின்ற கடல் வழியே எவ்வாறு கொண்டு வருவது என்பது போன்ற பிரசசினைகளும் இருக்கின்றன. இவ்வாறான பிரச்சினைகள் எல்லாம் பேசித்தீர்வு காண்பதற்கு நீண்ட நாட்கள் எடுக்கலாம். அதற்குள்ளான சில விடயங்களைக் கதைத்துத் தீர்வைக் காண்பதற்காகவே இந்தப் பேச்சுவார்த்தையினை நடத்த நான் தயாராய் இருக்கின்றேன்.

ஜே.வி.பி.யைப் பொறுத்த வரையில் அவர்களது கொள்கையிலிருந்து அவர்கள் பார்க்கும் போது அவர்கள் எடுத்த கொள்கை சரியானது. ஆனால், தற்போதைய நிலைமையில் இந்தநாட்டில் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு ஆரம்பிக்கப்படாவிட்டால்நாட்டின் பொருளாதாரம் மிகவும் வீழ்ச்சியடையும். எனவே அவ்வாறான கட்டத்தில் நான் எதற்கும் விட்டுக் கொடுக்கத் தயாரில்லை. எனவே, உடனடியாக பேச்சுவார்த்தையினை ஆரம்பிப்பதற்கு நான் முனைப்பாக இருக்கின்றேன். இந்த முயற்சிக்கு நான் நேரடியாக அதாவது நோர்வே போன்ற இடைத் தரகர்களைத் தவிர்த்து நேரடியான பேச்சுவார்த்தை நடக்குமானால், அதுகும் சிறந்த வழியாகும். ஆனாலும் தற்போதைய சூழ்நிலையில் அவ்வாறு நடக்க வாய்ப்பில்லை. எனவே உடனடியாக பேச்சுவார்த்தையினை ஆரம்பித்து சமாதான முயற்சிகளைத் தொடருவதே எனது நோக்கம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### தீர்வை...

இன்றைய அரசாங்கம் தீர்வையற்ற வாகனங்களை வழங்கியமையும் சமாதான நடவடிக்கைகள் அல்ல என அவர் குறிப்பிட்டார் ஐக்கிய தேசியக்கட்சி தற்சமயம் பதவியில் இருந்திருக்குமானால் தீர்வையற்ற வாகனங்களை தமிழீழ விடுதலைப் புலிகளிற்கு வழங்கியிருக்கும். அத்துடன் சம்புருக்கு 95 தமிழீழ விடுதலைப் புலிகளையும். வருவதற்கு அனுமதித்திருக்கும் எனவும விமல் வீரவன்ச குறிப்பிட்டார்.


கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

## பணிநிலைவேண்டுகை

| | | |
|---|---|---|
| பணிநிலை | :- | எழுதுனர் 302-16 |
| சம்பளம் | :- | 4500-5750 / 60X10-65X10 |
| வயதெல்லை | :- | 18 - 45 வரை |
| தகைமைகள | :- | அ) கூட்டுறவுப்பணியாளர் 17ஆவது சம்பளத்திட்டத்தில் 02 வருடங்களிற்குக் குறையாத அனுபவம். அல்லது ஆ) க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் கணிதம்/வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம்,சிங்களம்,தமிழ் உட்பட 06 பாடங்களில் இரண்டு தடவைக்கு மேற்படாத தடவைகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

மேற்படி தகைமையுடைய விண்ணப்பதாரிகள் சுயமாக தயாரித்த விண்ணப்பத்தினை பூர்த்திசெய்து "செயலாளர், ப.தெ.வ.அ.கூ.சங்கம், கரடிப்போக்குச்சந்தி, கிளிநொச்சி" என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ 19.08.2004ஆம் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

குறிப்பு :- ★சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

06 மாதங்கள் பயிற்சியாளராக கடமையாற்றுதல் வேண்டும். பயிற்சிக் காலத்தில் நாளாந்த அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.

*த. சிவயோகராசா,*
*தலைவர்,*
*கிளி.ப.தெ.வ.அ..கூ.சங்கம்*

(சி-9783)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.